விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | தை 23 ஞாயிற்றுக்கிழமை (05.02.2006) | தொலைபேசி 222 3378, | ஒலி 48

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# என்னுடைய ஆட்சியில் இரத்த ஆறு ஓடாது

## சுதந்திரதின வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த உரை

(நமது நிருபர்)

இலங்கை திருநாட்டில் இதுவரை காலமாகப்புரையோடியிருப்பது இனப்பிரச்சினையாகும். இதனைத் தீர்த்துவைப்பதற்கு அனைவரும் தமது பேதங்களை மறந்து முன்வரவேண்டும். நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடமாட்டாது. இவ்வாறு காலிமுகத்திடலில் நேற்று நடை பெற்ற நாட்டின் 58வது சுதந்திர தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத்தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதினத்திற்கு எதிர்ப்பு...

## திருகோணமலை,மன்னாரில் முழு அளவில் பகிஷ்கரிப்பு



மன்னாரில்...

## புலிகள்-தமிழ் கூட்டமைப்பு நேற்று முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று தமிழீழவிடுதலைப்புலிகளைச் சந்தித்து சமகால அரசியல் நிலைவரம்தொடர்பாககலந்துரையாடினர்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இச் சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ,அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் யாழ்ப்பாணம் ,முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள்,சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் ஆகியோர் விடுதலை புலிகள் தரப்பில் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பு குறித்து ஊடகவியலாளர்களிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறுகையில், நேற்றைய சந்திப்பில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாகவும் கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களினை விடுவிப்பது பற்றியும் கலந் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் இரண்டு நீதிபதிகள் இராஜினாமா

(கொழும்பு)

செயற்படுவது தமது மனச்சாட்சிக்குப் பொருத்



மன்னாரில்...

சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் திருகோணமலை,மன்னார் பிரதேசங்களில் முழு அளவிலான பகிஷ்கரிப்புப்போராட்டம் நேற்று இடம்பெற்றது.

அனைத்து வர்த்தக நிலையங்களும் , சந்தைகளும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் எதுவும் இயங்கவில்லை.இதனால் திருகோணமலை மன்னாரப் பிரதேசங்களில் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையிலான நேற்றைய போராட்டத்திற்கான அழைப்பை தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவை ,மக்கள் படையணி, தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன விடுத்திருந்தன. (ந-4)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி,சோக கீதம்

இலங்கையின் 58வது சுதந்திர தினமான நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு சோககீதம் இசைக்கப்பட்டது.

சுதந்திரதினத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் சோககீதம் இசைக்கப்பட்டதுடன் கறுப்புக் கொடிகளும்பறக்கவிடப்பட்டிருந்தன .

இதேவேளை நேற்றுக்காலை 9மணியளவில் யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஷ் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய அரச திணைக்களங்கள் எவற்றிலும் தேசியக் கொடி ஏற்றப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-132)

# இரண்டு நீதிபதிகள் இராஜினாமா

(கொழும்பு)

உச்சநீதி மன்றத்தின் நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் ரீ.பீ.வீரசூரிய ஆகியோர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ளனரென சட்டத்துறை உயர் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் கொங்கொங்கில் இருந்து செயற்படும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டு தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

தமது பொறுப்புக்களில் தொடர்ந்தும் செயற்படுவது தமது மனச்சாட்சிக்குப் பொருத்தமற்ற செயல் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக தாம் அறிய வந்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் இராஜினாமாவால் நீதிச் சேவை ஆணைக்குழு செயலற்றதாக்கப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 17வது திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பு கவுன்சிலின் சிபார்சுடனேயே இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படலாம்.

ஆனால் அரசியல் அமைப்பு கவுன்சிலின் பதவிக்காலம் முடி (12 ஆம் பக்கம் பார்க்க)

# 2 ஆயிரத்து 42 கைதிகள் நேற்று விடுதலையாகினர்

(கொழும்பு)

நாட்டின் 58வது சுதந்திர தினத்தையொட்டி 2 ஆயிரத்து 42 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


நாட்டில் உள்ள 27 சிறைச்சாலைகளில் இருந்தே இக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச்சட்டம்,மற்றும் அவசரகாலச்சட்டம் தவிர்ந்த சிறு குற்றங்கள் புரிந்தவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ந)



# துன்பங்களை நினைத்து வாடுவதை விட அவற்றை இன்முகத்துடன் எதிர்கொள்வதே மேலானது

## பரமபிதாகாட்டிய பாதை

தொலைவில் இருக்கும் பொழுதுதான் மனிதன் அதிகம் நேசிக்கப்படுகின்றான். ஏனென்றால் அருகில் உள்ளபோது அவனிடம் உள்ள குறைகளே வெளிப்படுகின்றன; பிரிந்துள்ள போது அவனது நிறைகளே நினைவில் நிற்கின்றது. இந்த நிலை மண்ணில் வாழும் மனிதர்க்கும் பொருந்தும். உயிர்



நீத்த வர்களுக்கும் பொருந்தும் குறிப்பாக வாழ் நாளெல்லாம் ஒரு மனிதனைத் தூற்றும் சமூகம் அவன் இறந்துவிட்டால் போற்றிப் புகழ்கின்றது.

வாழும்போது வாழ்த்தாமல் சாவிலே ஊரைக்கூட்டி புண்ணியங்கள் செய்வர் இது இயற்கை நியதியாகிவிட்டது.

இறை யேசு வாழ்ந்த காலத்தில் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் குறைவு. பின்னர் யேசுக் கிறிஸ்து மரித்து உயிர்த்த போதுதான் நிறைவு கொண்டார்கள் .கண்டு விசுவாசிப்பதை விட காணாமல் விசுவாசிப்பதே மேல் என்று திருவிவிலியம் பாடம் புகட்டுகின்றது. (லூக்கா 24-51 வசனத்தில்... 'அவர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்த போதே அவர் அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றமடைந்தார்' என்றுள்ளது.) 'மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் பாவ மன்னிப்புப் பெற மனமாறுங்கள்' என்ற மறைநூல் வாக்கு கிறிஸ்து யேசு பிறப்பதற்கு முன்பே மேசேயின் சட்டத்திலும் இறை வாக்கினர் நூல்களிலும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இறைமகன் யேசு எவ்வாறு பாடுபட்டு, மரணித்து, உயிர்த்து, விண்ணேற்றம் அடைந்தாரோ அதேபோல உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டு மரணத்தின் பின்பும் மறுவாழ்வில் இறைவன் முன்னிலையில் அகமகிழ்வோம் என்பது கிறிஸ்துவை பின்பற்றும் மக்களின் நம்பிக்கையாகவுள்ளது.

ஆகவே பிரிவு என்பது இதயத்தை மென்மையாக்குகின்றது. பிரிவினால் தான் அன்பு வலுவடைகின்றது. மனிதர்கள் பிரிந்து போவர். ஆனால் இறைவன் ஒவ்வொருவரோடும் வாழ்கின்றார் வழிநடத்துகின்றார். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலக அழிவுகள் இறைவனால் கொடுக்கப்பட்டதல்ல. மனிதன் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டவை. சுனாமி இழப்புக்கள் வந்தது. கடவுள் மீது பழியைப்போட்டோம். சூழலை மாசுபடுத்தி மரங்களை வெட்டியது மனிதன், போர் இழப்புக்கள் அநியாயப் படுகொலைகள் என்று தொடர்கின்ற அசம்பாவிதங்கள் எல்லாம் இறை உணர்வு மரத்துப் போன மனிதர்களால்தான்.

இன்றைய ஆன்மீகத் தலைவர்கள் சிலர் போராடுவதை நியாயப்படுத்துகின்றனர். நாட்டைக் கூறுபோடுகின்றார்கள். இவை புதிய விடயமல்ல.

யேசுவின் பிறப்புக் காலத்திலேயும் யூத மக்களின் இறுக்கமான சட்டங்களால் தான் உண்மையான இறைவனைக் கண்டுணர முடியாது போனது. இன்றைய அசம்பாவிதங்களின் மத்தியிலும் இறைவன் அருள் பொழிகின்றார். சமாதானத்தின் தடைக்கல்லாய் துப்பாக்கிகள் முளைத்துவிட்டதே... இதனால் அவதரித்த இறைவனை இதயங்களில் ஏற்ற அனுமதி கொடுக்க முடியாதவர்களாயிருக்கின்றோம்!

நான் இறந்து விடுவேனா, மீண்டும் இடப்பெயர்வா என்றெல்லாம் ஒவ்வொருவரும் பயப்படுகின்றோம்! நாளுக்கு நாள் வேதனைப்படும் சக மனிதரின் துன்பங்களை எத்தனை பேர் துடைத்தோம். இல்லிடமின்றி அவதிப்பட்டு வருவோரை துரத்தியடிக்கின்றோம். பிச்சை கேட்டு வருபவரை விட்டியடிக்கின் றோம்... இப்படிப் பட்டியல் நீள்கின்றது. இருந்தும் நான் மட்டும் காப்பாற்றப்பட வேண்டும்.

**ஜோ.ஜெஸ்ரின்**

இறைவா என்று புலம்புவதை விட்டு எல்லோருக்காகவும் எல்லோரும் செபிப்போம் செபித்தால் எங்களைவிட்டுப் பிரிந்து போயிருக்கிற நற்குணங்களை மீட்டெடுக்க முடியும்.

இதன் வழியாகவே ஒவ்வொருவரின் மனங்களில் உள்ள இறை உணர்வும் பலப்படுத்தப்பட முடியும்! துன்ப துயரங்களை விட்டு ஓட நினைத்து நினைத்து ஏங்குவதை விட அவற்றை இன்முகத்துடன் எதிர்கொள்வதே மேலானதாகும்! □

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

அராலி மத்தி கிராம அலுவலர் பிரிவிலுள்ள மூன்று வீதிகள் இவ்வருடம் நியாப் திட்டம் II நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அராலி மத்தி-நித்தியசித்தி வீதி, உலோகசிட்டி வீதி, வண்ணபுரம் சிவன் வீதி ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ் வீதிகளைப் புனரமைப்பதற்கு 11 இலட்சம் ரூபா நிதியை நியாப் திட்டம் II இல் ஒதுக்கி வழங்கியிருப்பதாக அராலி மத்தி வண்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார். (து-49)

## புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாட்டின் கீழ், அமைக்கப்பட்டுள்ள இளைஞர் கழகங்கள் மற்றும் பிரதேச சம்மேளன அமைப்புக்கள் என்பவற்றை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் புனரமைப்பு மற்றும் பதிவு நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (க-7)

# நிலையான மின்கட்டணத்தை 8சதவீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நிலையான மின் கட்டணத்தை 20சதவீதத்தால் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் டபிள்யு டி ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

மின்சாரசபையின் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்,

மின்பாவனைக்கான நிலையான கட்டணத்தை 8சதவீதத்தால் அதிகரிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மிக விரைவில் வெளியிடப்படும்.

மின்பாவனையாளர் தங்களது கட்டணத்தை உரிய முறையில் செலுத்தாமையினால் மின்சார சபைக்கு மாதமொன்றுக்கு 4மில்லியன் ரூபாநட்டம் ஏற்படுகின்றது.

இவற்றை நிவிர்த்தி செய்ய வேண்டுமாயின் மின் பாவனைக்கான நிலையான கட்டணத்தை 20 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும்.

நாட்டின் மின்சார தேவையை முற்றுமுழுதாக பூர்த்தி செய்ய வேண்டுமானால், அனல் மின் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இதற்கமைய மேல் கொத்மலைத் திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேசமயம் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுவதாலும் மின்சாரசபைக்கு பல பில்லியன் ரூபா நட்டமேற்படுகிறது.

இதனால் இச் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரை கைது செய்வதற்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, மின்சார பாவனையாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து இலங்கை மின்சாரசபையின் 011 2481248 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்கலாம்.

மின்சார சபையின் செயற்பாடுகளை மையப்படுத்துவது குறித்தும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொண்டு ஆலோசனை வழங்கலாம்.

இவ் இலக்கத்துடன் 24மணி நேரமும் தொடர்புகொள்ள முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

## இராசிபலன்

**05.02.2006**
**(தை 23, ஞாயிற்றுக் கிழமை)**
**சப்தமி காலை 6.36மணிவரை**
**பரணி பின்னிரவு 1.44மணிவரை**
**இராகுகாலம் 5.05-6.35மணிவரை**
**சுபநேரம் 9.35-11.05 மணிவரை**
**அட்டமி, நவமி**

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, நிலைமாற்றம், தெய்வசிந்தை, காரிய அனுகூலம். |
| இடபம் | காய அலைச்சல், சயனசுகக்குறைவு, ரோகநிலை, மரியாதைக்குறைவு. |
| மிதுனம் | பெருமையடைதல், சுபநிகழ்வு, தெய்வ சிந்தை, போசனசுகம். |
| கடகம் | நண்பர்கள் உதவி, எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம், சுபசெய்தி. |
| சிங்கம் | கட்டுப்பாடு, தந்தை வழி உறவு, இடமாற்றம், உடல்நலம். |
| கன்னி | மனச்சஞ்சலம், அபகீர்த்தி, காரிய தடங்கல், போசனசுகம். |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், களஸ்திர நன்மை, நல்ல செய்தி, போசன சுகம். |
| விருச்சிகம் | செயதொழில் விருத்தி, முயற்சி கைகூடும், உறவினர் உதவி, உற்சாகம். |
| தனுசு | தொழில் சிந்தை, குடும்பக் கவலை, காரிய இடையூறு, சொத்துக்கள் நன்மை. |
| மகரம் | அமைதிக்குறைவு, புதிய தகவல், காரிய தாமதம், உஷ்ண நிலை. |
| கும்பம் | காரிய சித்தி, பிரயாணநன்மை, நல்ல செய்தி, விருந்துபசாரம். |
| மீனம் | கடினவார்த்தை, முயற்சி தாமதம், பண விரயம், திடீர் நன்மை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

## தபால் நிலையங்களுக்கு தொலைத் தொடர்பு வசதி

சீரான தொலைத் தொடர்பு வசதியில்லாத கிராமிய தபால் நிலையங்களுக்கு இந்த ஆண்டுக் குள் புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தொலைத் தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட இருக்கின்றன.

இவ்வாறான 500உப தபாலகங்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கு புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் தபால் மா அதிபர் தெரிவித்தார்.

தபால் மா அதிபர் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். சீரற்ற தொலைபேசி வசதிகளைக் கொண்டிருக்கும் தபாலகங்களில் கோளாறுகளைத் திருத்துவதற்கு பிரத்தியேகமான திட்டம் அமுல்செய்யப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

## மக்கள் விசனம்

வலி-மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மூளாய்-காளிகோவிலடி முன் கோடை வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக 4வருடங்களாக வலி.மேற்குப் பிரதேச சபையினருக்கு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற பொழுதிலும் இவ் வீதி இன்னமும் திருத்தியமைக்கப்படவில்லை என்றும்,

வலி-மேற்குப் பிரதேசத்திலுள்ள சிறிய சிறிய வீதிகள் எல்லாம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்ற பொழுதிலும், இவ் வீதி புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியை அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (து-49)

### புங்குடுதீவிலும்

## மரண விசாரணை அதிகாரி இல்லை

புங்குடுதீவிற்கு மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புங்குடுதீவுப் பகுதியில் நீண்டநாட்களாக மரண விசாரணை அதிகாரி இல்லையெனவும் இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-134)

## பறவைக் காய்ச்சல் நோய் குறித்து பரிசோதனை செய்ய ஆய்வுகூடம்?

(கொழும்பு)

பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ள தனியானதொரு ஆய்வுகூடமொன்றை அமைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.கே.ஆர். அமரசேகர தெரிவித்தார்.

இவ் ஆய்வுகூடத்தை அமைப்பதற்கு சுமார் 800 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பான பரிசோதனைகளை நடத்த ஆய்வுகூட வசதி, நாட்டில் தற்போது இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் அந்த நோய் வருவதைத் தடுக்கவே இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (க-7)

## கூட்டம்

யாழ்.சுகவாழ்வு நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு நிறுவனத்தின் தலைவர் அருட் தந்தை எஸ். டேமியன் தலைமையில் நிறுவன பணிமனை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (க-134)

# வன்முறைகள் நிறுத்தப்பட்டால்தான் பேச்சுவார்த்தைக்கு நாம் தயாராவோம்

(யாழ்ப்பணம்)

**மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பத்து உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிகந்தையில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு சம்பந்தமாக எமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கவும் – அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவும் இந்த மாபெரும் பேரணியில் நாம் ஒன்றுதிரண்டுள்ளோம்.**

**அரச காட்டுப்பாட்டில் இத்தகைய பயங்கரவாத நிகழ்வுகளுக்கு ஒரு தொடர்ச்சி உண்டு.**

**அண்மையில் புதிய ஜனாதிபதி பதவியேற்றதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களைப் பார்த்தோம் என்றால் வன்முறைகளை அவர்களே ஆரம்பித்ததை நாங்கள் எல்லோரும் கண்டுகொள்ளலாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.**

தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணி நிகழ்வின் முடிவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாவீரர் தின நிகழ்வுகளுக்காக வீதி அலங்கார வேலைகளில் ஈடுபட்ட இருவர் கொல்லப்பட்டமை, புங்குடுதீவில் தர்சினி எனும் இளம்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை, அமைதி ஊர்வலம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை மற்றும் பொதுமக்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம், கைது, சித்திரவதைகள் ஆகிய சம்பவங்கள் யாழ்ப்பாணப் பகுதிகளில் ஓர் அச்சமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வடக்கு கிழக்கு எங்குமே புதிய ஜனாதிபதியின் வருகைக்குப் பின்னர் ஒரு அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த அரச பயங்கரவாதத்தால் ஒரு பகுதியினர் அச்சமடைந்தார்கள். இன்னொரு பகுதியினர் ஆத்திரமடைந்தனர். ஆத்திரமடைந்த இளைஞர்கள் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

ஒரு பயச்சூழலும், ஒரு ஆத்திரச்சூழலும் நிறைந்த நிலையிலேயே வடக்கு - கிழக்கு பகுதி இருந்தது. இந்த நிலையில் சர்வதேச நாடுகள் தலையிட முன்வந்தன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி அவர்களின் கோரிக்கைக்கிணங்க, எங்களுடைய தலைவரும் புதிய ஜனாதிபதிக்கு மேலும் சந்தர்ப்பம் வழங்க உடன்பட்டு, தமிழ் மக்களுடைய நல்லெண்ணத்தை வெளியுலகுக்குக் காட்டுவதற்காகக் கைதுசெய்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொலிஸாரையும் விடுவித்து ஒரு நல்லெண்ண சூழலை ஏற்படுத்த முயன்றார்.

ஆனால் அன்று மாலையே வெலிக்கந்தையில் மேஜர் கபிலன் என்கின்ற மூத்த போராளி கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து இப்போது தமிழர் புனர்வாழ்வு கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்டனர். சிங்கள ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தை என்பதை உதட்டளவில் சொல்லிக் கொள்கின்றார்கள். தமிழர் உரிமைகளை ஏற்றுக்கொள்ள விரும்பாத மன எண்ணத்தை உள்மனதில் வைத்திருக்கின்றார்கள். அதன் காரணமாகவே வெளியுலகுக்குத் தெரியாத வகையில் இத்தகைய பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவி புரிகின்றவர்கள். அப்படிப்பட்ட ஊழியர்களை கடத்தியதானது அவர்களுக்கு உண்மையில் அமைதி வழியில் தீர்வு வருவதில் நாட்டமில்லை என்பதைத்தான் காட்டுகின்றது.

இந்த நிலையில் அவர்களிடம் தொடர்ந்து விசாரணைக்குழுக்களை நியமியுங்கள் என்று நாங்கள் கேட்க வரவில்லை.

இதுவரை அவர்கள் அமைத்த ஆணைக்குழுக்களுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும்.

பிந்துனுவெவவுக்கு நடந்தது என்னவென்றும் தெரியும். இவர்களுடைய ஆட்களை இவர்களே விசாரிப்பதற்கான ஆணைக் குழுக்களை அமையுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை.

இவர்களுக்கு அதாவது – சிங்கள் ஆட்சியினருக்கு உண்மையிலேயே சமாதானத்தில் விருப்பம் இருந்தால் தங்களது ஆட்களை அதாவது சிங்களப் படையினரைப் உடனடியாக தமிழ்ப் பகுதிகளில் இருந்து விலக்க வேண்டும். இப்போது உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளிடமும் நாங்கள் சொல்வது என்னவென்றால் மனிதாபிமான பணிகளைப் புரிகின்ற இந்த அரசசார்பற்ற நிறுவனத்திற்கு நடந்திருக்கின்ற நிகழ்வு மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நடக்கலாம்.

இந்த நிலையில் உடனடியாக தெற்கிற்கு சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதன் மூலம் தெற்கு மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதச் செயல்கள் நிறுத்தப்பட்டு தெற்கின் மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லையென்றால் பேச்சுவார்த்தைக்கு எங்களுடைய தலைவர்களை தமிழ்மக்கள் அனுப்பமாட்டார்கள் என்பதையே எமது செய்தியாக சொல்லி வைக்க விரும்புகின்றோம் என்றார். (கு)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தினை வன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய நிகழ்வானது முன்னெடுக்கவுள்ள சமாதான செயற்பாடுகளுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் ஒன்றாகவே அமையும் என்பதனை தெளிவுபடுத்துகின்றோம். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த செவ்வாய்க்கிழமை வெலிகந்தை இராணுவ சோதனைச் சாவடிக்கு அண்மையாக வைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் இராணுவத்தினாலும் அதனோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களினாலும் கடத்தப்பட்டுள்ளனர்.

பேச்சுக்கான இடம் குறித்து, இருதரப்பும் இணக்கம் காணப்பட்டுள்ள இந்நிலையில், ஒரு இயல்புநிலையை ஏற்படுத்தி சமாதானத்திற்கான பாதையை மேலும் பிரகாசமாக்க வேண்டி அரசாங்கம், இவற்றினை மேற்கொள்ளாது தனது இராணுவத்தினதும், அதனது ஒட்டுக்குழுக்களினதும் உதவியுடன் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை அராஜகத்தை அரங்கேற்றி வருவது வேதனையையும், பெரும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் சிங்கள தேசம் இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தையில் சிரத்தை காட்டும் ஒன்றாக இருக்குமானால், இவ்வாறான இராணுவ வன்முறைகளை தமிழர் மீது மேற்கொள்ளாது.

ஆனால் சிங்கள இனவாத அரசு தனது இனவாத போக்கினை மாற்றப்போவதில்லை என்பதனை வெளிப்படுத்தும், உணர்த்தும் நிகழ்வாகவே தற்போதைய நிகழ்வுகளை நோக்க வேண்டியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது ஒரு தொண்டு நிறுவனமாகும். ஒரு தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கடத்தப்படுவது என்பது ஒரு நாட்டின் இயல்புநிலை எவ்வளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மீதான அச்சுறுத்தலானது, ஏனைய தொண்டு நிறுவனங்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகவே அமைகின்றது.

எனவே, கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசும், ஜனாதிபதியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தமக்கு எதுவுமே தெரியாது என்று பூச்சாண்டி காட்டும் வேலைகளை விடுத்து, இனியும் தமிழர் தரப்பை ஏமாற்ற எத்தணிக்காது, சமாதானத்தில் பற்றுறுதியான போக்கைக் கடைப்பிடிக்க அரசை வேண்டுகின்றோம் என்றுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம்

இதேவேளை, கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்கக்கோரி தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை அரசோடு தாம் ஜெனிவாவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி பேசுவதற்கு தயார் என்ற நிலைப்பாட்டை தெரியப்படுத்திய பின்னரும் சமாதானத்தை ஏற்காத அரசும் படைகளும் தமது வழமையான பாணியில் தமிழீழ விடுதலைப்புலிகளையும் மனிதாபிமான பணியில் ஈடுபடும் தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளையும் சீண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையானது அதன் இரட்டை முகத்தை இன்று அம்பலப்படுத்தி உள்ளது.

அதன் முதல்கட்டமாக போராளி மேஜர் கபிலன் படையினராலும், தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும் சமாதானத்திற்கு எதிராகவும் செயற்படும் ஒட்டுப் படைகளாலும் படுகொலை செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 31ஆம் திகதி அன்று இனம், மதம், மொழி வேறுபாடு இன்றி மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிகந்தப் பிரதேசத்தில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

அரசினதும் படைகளினதும் இச்செயற்பாடானது திட்டமிட்டு சமாதானத்தை மேலும் குழப்பும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

தனது தேவைக்காக ஒட்டுக்குழுக்களை வளர்க்கும் இச்செயற்பாடானது யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும். இச்செயற்பாட்டினூடாகவே கடந்த காலத்தில் சமாதானச் சூழல் சீர்குலைக்கப்பட்டிருந்தது.

தமிழர் தாயகத்தில் என்றும் இல்லாதவாறு அரச பயங்கரவாத வன்முறையினை தமிழ்மக்கள் மீது திணித்தது.

இன்று மீண்டும் சமாதானத்திற்கான சூழல் தோற்றுவிக்கப்படும் நிலையில் மீண்டும் சமாதானத்திற்கான ஆரம்பகட்ட சூழல்கூட அரசபடைகளால் சீர்குலைக்கப்படுகின்றது.

எனவே சர்வதேச சமூகமும், சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும் விரைந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களை படைகளிடமிருந்து மீட்டெடுப்பதனூடாக சமாதானத்துக்கான சூழலை உருவாக்குவதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையெனில் சமாதானத்திற்காக சூழல் அரச பயங்கரவாதத்தினால் சீர்குலைக்கப்பட்டு பாரிய யுத்த சூழல் இலங்கைத் தீவில் தோற்றுவிக்கப்படும்.

இதனையே அரசும் விரும்புகின்றது என்றுள்ளது. (கு)

உள்ளூராட்சி தேர்தல் குறித்த

# ஐ.தே.கட்சியின் தீர்மானம் நாளை அறிவிக்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடுமா? அல்லது கூட்டணிக்கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுமா? என்பது குறித்த கட்சியின் தீர்மானம் நாளை அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுச் சபை கூடி இந்தத் தீர்மானத்தை வெளியிடும்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் இணைந்து போட்டியிடுவது குறித்தும் வேட்புமனு சபை ஆராயும் என கூறப்படுகின்றது.

18 மாவட்டங்களில் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன என்றும்,

தகுதியான வேட்பாளர்கள் எதிர்வரும் 13, 14, 15ஆம் திகதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய விருப்பதாகவும் கட்சியின் பராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (க-9)

## விவசாயிகள் கவலை

(பொன்னாலை)

வலி-தென்மேற்கு, வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள விவசாயிகள் வெங்காயச் செய்கைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும் வெங்காயத்தில் தண்டுகள் பழுப்புநிறமடைந்து வரும் அதேநேரம், இலைச்சுருள் நோய் ஏற்பட்டுவருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி இரு பிரதேச செயலர் பிரிவுகளுக்குமுட்பட்ட பண்டத்தரிப்பு, மாதகல், சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், அராலி ஆகிய கிராமங்களில் வெங்காயச் செய்கை களைகட்டி வருகின்றபோதும், தற்போதைய பனிக்காலம் காரணமாக அவற்றில் பல்வேறுவித நோய்கள் பரவிவருகின்றதெனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (து-49)

## பேரூந்து தரிப்பிடத்தில் துவிச்சக்கர வண்டிகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பேரூந்து தரிப்பிடத்தில் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படுவதால் பேரூந்துகளை நிறுத்த முடியாதுள்ளதாக சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் இது விடயத்தில் தமக்கு ஒத்துழைப்பு தந்து உதவுமாறு பேரூந்து சாரதிகள் கேட்டுள்ளனர். (கு-35)

## மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு சோலையம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் 8ஆம் திகதி புதன்கிழமை 12மணி முதல் மறுநாள் 12 மணிவரை இடம்பெறும். (து-2)

## இன்று ஒரு தகவல்

# ஒரு விசித்திர வழக்கு

இன்று உலகம் மிகவும் மாறித்தான் விட்டது சார். கற்பனையைவிட சுவாரஸ்யமான சம்பவங்கள் எல்லாம் கண் முன்பு நடந்து கொண்டிருக்கிறது. பிரான்ஸில் நடந்த சம்பவம் இது. ஒரு பாறையில் கார் மோதி எரிந்து விட்டது. அதில் போனவரும் காலியாகிவிட்டார். உடனே பொலிஸ் அங்கே போய்ச்சேர்ந்து காரின் இலக்கத்தைப்பார்த்து ஆள் யாரென்று கண்டு பிடித்தார்கள். அவரது வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

அந்த ஆளுக்கு ஒரு மனைவி. ஒரு காதலி ஆக இரண்டுபேர். இரண்டு பேரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாகவே இருந்தார்களாம். இந்த இரண்டு பேரும் செய்தி கேள்விப்பட்டு... உடனே கறுப்பு உடை அணிந்து கொண்டு விபத்து நடந்த இடத்திற்கு வந்தார்கள். கருகப் போன சடலத்தைப் பார்த்து அது எங்கள் கணவர். தான் என்று அடையாளம் காட்டினார்கள்.

அதன் பின் முறையான பிரேத பரிசோதனை நடந்தது. அந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் கூறி விட்டனர். அவர்களும் சடலத்தை வாங்கிக் கொண்டுபோய் எரித்துவிட்டனர். இறந்து போன அந்த ஆள் மூன்று காப்புறுதி கம்பனிகளில் 8 ஆயுள் காப்புறுதி எடுத்திருந்தார். அந்த மூன்று கம்பனிகளில் இரண்டு கம்பனிகள் அவரது மனைவிக்குக் காப்புறுதிப் பணத்தைக் கொடுத்துவிட்டன. ஒரு கம்பனி மட்டும் பணம் கொடுக்காமல் தாமதித்து வந்தது.

அந்தக் கம்பனி என்ன செய்தது என்றால் ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் சென்று ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தியது. அந்த ஆளின் விதவை மனைவியையும் காதலியையும் கண்காணிக்கச் சொல்லியது. அந்த நிபுணர் விபத்து தொடர்பான பதிவுகளையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்று தெரிந்தது. கருகிப்போன சடலத்தின் பல் அமைப்பு தொடர்பான குறிப்புகளையும் பார்த்தார்.

அந்த மனைவியும் காதலியும் தொலைபேசி மூலமாகப் பேசிக் கொள்வதை இரகசிமாக ஒட்டுக்கேட்டார். எல்லாவற்றையும் கவனிக்கும் போது காரில் செத்துப் போனது உண்மையிலேயே அந்த ஆள் இல்லை என்பது தெரிந்து விட்டது. அப்படியென்றால் அந்த ஆள் எங்கே? அந்த ஆசாமிக்கு 46 வயது இருக்கும். அவனைக்காணவே இல்லை. ஆனால் அந்த மனைவியுடனும் காதலியுடனும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார். ஒரு நாள் திடீரென்று கண்டு பிடித்து விசாரித்த போது இந்த இளைஞன்தான் அந்த ஆள் என்பது தெரிந்தது.

என்ன விடயம் தெரியுமா? பிளாஸ்டிக் சர்ஜரி செய்து முகத்தையே மாற்றியிருக்கிறான் சார் அப்படியென்றால் அந்தக் கார் விபத்து? இந்த ஆள் என்ன செய்திருக்கிறான்... முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலைசெய்யும் ஒரு சிநேகிதனிடம் போய் ஒரு அனாதை சடலம் ஏதாவது கிடைக்குமா? என்று கேட்டிருக்கிறான். அந்த சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் சடலம் எதுவுமில்லை உடனே இருவருமாகச் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டி ஒரு பிச்சைக்காரனை அழைத்துக்கொண்டு வந்து அளவுக்கு மீறி தூக்க மாத்திரையைக் கொடுத்து காலி செய்து அவனைத்தன்னுடைய காரில் வைத்துக்கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீ வைத்திருக்கிறார்கள். அதன்பின் அந்த ஆள் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து தன் முகத்தையே அடையாளம் தெரியாமல் செய்து கொண்டானாம்.

எப்படியிருக்கிறது பாருங்கள் இந்த ஏமாற்று வேலை?. அவனுடைய திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் நமது கணக்குப்படி சுமார் 8 கோடி ரூபா அவனுக்குக் கிடைத்திருக்கும் பாவம் மாட்டிக்கொண்டான். இப்போது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படியிருக்கிறதென்றால் தவறு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிப்பவனும் புத்திசாலித்தனமாக கொள்ளையடிக்கிறான். அதனால் நாம் அதை விட புத்திசாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு அம்மா ஒரு காப்புறுதி நிறுவனத்தைத் தேடிவந்தாராம். இதுவும் வெளிநாட்டில்தான். வந்து அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து ஏன் சார் இன்று என் கணவரின் உயிரை இன்சூர் செய்து கொண்டு நாளைக்கு அவர் இறந்து விட்டால் எனக்கு ஏதாவது கிடைக்குமா? என்று கேட்டார்கள். "கிடைக்கும்"என்றார் அவர். "என்ன?" என்று கேட்டார். இவர் "ஆயுள் தண்டனை" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கடத்தப்பட்ட த. பு. கழகத்தினரை விடுவிக்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## கிளி.பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் வலியுறுத்தல்

(கிளிநொச்சி)

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரை விடுதலை செய்ய அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கிளிநொச்சிப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொலனறுவை, வெலிக்கந்தை இராணுவச் சோதனை நிலையத்திற்கு அண்மையில் இரு வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்டவர்களும் காணாமல் போனவர்களுமான தமிழர் புனர்வாழ்வு கழகத்தைச் சேர்ந்த 8 பணியாளர்களையும் விடுவிக்க அரசாங்கமும் சர்வதேச சமூகமும் உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கில் பெண்களுக்கான திட்டங்களை முன்னெடுத்து வரும் தொண்டு நிறுவனமாகிய நாம் மேற்படி கடத்தலில் 3 பெண் பணியாளர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து அதிர்ச்சியும் அதிருப்தியும் அடைகிறோம்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் போராலும் ஆழிப் பேரலையாலும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி அவர்களின் உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு பணிகளுக்காக தம்மை அர்ப்பணித்திருந்த சந்தர்ப் பத்தில் அவர்கள் மீதான மனிதாபிமானமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சம்பவமானது எமது நிறுவனத்தின் பணிகளையும் கேள் விக்குறியாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி பணியாற்றிய அவர்களின் பாதுகாப்பு இன்று அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதை எண்ணி நாம் விசனமடைகிறோம்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் எவ்வித பால் வயது வேறுபாடுமின்றி தொண்டர்கள் பொதுமக்கள் கல்விச் சமூகத்தினர் ஊடகவியலாளர்கள் போன்றோர் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற மனித உரிமை மீறல்களான காணாமல் போதல், கைதுகள், கொலைகள், பாலியல் வன்முறைகள் போன்ற சம்பவங்களால் பொதுப்பணிகளில் ஈடுபடும் எம் போன்ற பல நிறுவனங்களும் அச்சுறுத்தப்படுவதாகவே உணர்கிறோம்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் எவ்வித துன்புறுத்தலுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என இங்கு பணியாற்றும் சர்வதேச பிரதிநிதிகள் , சர்வதேச அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மீண்டும் ஒரு முறைகேட்டு நிற்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## ஆதன வரிக்கழிவு சலுகைக்காலம் நீடிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்களிற்கான 2006ஆம் ஆண்டுக்கான ஆதன வரிக் கழிவுச் சலுகைக்காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் 10வீத ஆதனவரிச் சலுகை ஒரு மாதத் துக்கு மாத்திரமே வழங்கப்படுவது வழக்கமாக இருந்த போதிலும் இந்த வருடம் மேலும் ஒரு மாத காலத்துக்கு இந்த வரிச் சலுகை நீடிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக ஆதன வரியினை சபையில் செலுத்துவோர் 10 சத வீத வரிக்கழிவினை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-21)

# தமிழர்களை அழிக்கும் நடவடிக்கைகளில் ஒட்டுக்குழுக்களும் இணைந்துள்ளனவாம்

## தயா மோகன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களை அழிக்கின்ற மற்றும் சமாதானத்திலிருந்து இரு தரப்பினரையும் விலகச் செய்கின்ற நடவடிக்கைகளில் படைப் புலனாய்வுத்துறையும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் ஈடுபட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்,

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கான நல்லெண்ண அடிப்படையில் தலைவர் எங்கள் பகுதிக்குள் ஊடுருவி தடுப்புக் காவலில் வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களில் ஒருவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதற்கமைய ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் விடுவிக்கப்பட்டார் ஆனால் அன்றைய தினம் எங்கள் போராளி ஒருவர் வடமுனையில் ஒட்டுக்குழுக்கள் மற்றும் படையினரின் தாக்குதலில் உயிரிழந்தார்.

தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு மீது நம்பிக்கை இல்லை. இதனால் மக்கள் அரசுக்கு எதிராக கொதித்தெழுந்தனர். இந்நிலையில் தான் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டினையும் கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தைக்கு போவதற்கான நிலைப்பாட்டிற்கு நாம் வந்தோம்.

ஆனால் இன்று நிலமை மோசமடைந்துவிட்டது. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மனிதாபிமான பணிகளைச் செய்து வருகின்ற நிறுவனம் அதன் பெயரில் தமிழர் என்றசொல் வருவதன் காரணமாகத் தான் அந்த நிறுவனம் மீது இவ்வாறான தாக்குதல், பணியாளர்கள் கடத்தல் என்பன இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான ஒரு சூழலில் பேச்சுக்குச் செல்வது என்பது பரிசீலணைக்குட்பட வேண்டிய விடயம் எனத் தெரிவித்த தயாமோகன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேச சமூகத்திடம் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் இவ்வாறான ஒரு கடத்தல் நாடக நடவடிக்கையினை மேற்கொண்டதாக அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார்.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் இவ்வாறு கூறியிருப்பது வேடிக்கையானது. தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது சர்வதேச ரீதியாக செயற்படும் தொண்டு நிறுவனம். அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளியால் பாதிப்புற்றோருக்குக்கூட அது தமது மனிதாபிமானப் பணிகளை வழங்கியிருந்தது.

தீவுச்சேனை குளத்திற்கு அருகே ஒட்டுப்படை முகாம் உள்ளது. படைமுகாம்களில் இருந்தே ஒட்டுப் படை முகாமுக்கான மின்சாரம் வழங்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் அங்கு சென்று கடத்தப்பட்டவர்களை மீட்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாது பொதுமக்கள் வீடுகளில் பொலிஸார் தேடுதல் நடத்தியிருப்பது வேடிக்கையானது என்றார். (க)

## கல்வி அமைச்சர்-தமிழர் ஆசிரியர் சங்கம் சந்திப்பு நாளைமறுதினம் இடம்பெறும்

(திருகோணமலை)

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிற்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் இடையிலான சந்திப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இசுறுபாயவில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்புக்கு தேவையான சகல தரவுகளையும் திரட்டிய மகஜர் ஒன்றை தமிழர் ஆசிரியர் சங்கம் தயாரித்து வருகின்றது.

நாட்டின் சமகால கல்விப் பிரச்சினைகள், தொண்டர் மற்றும் ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் விபரம், பதில் அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் நிரந்தர நியமனம் போன்ற பல விடயங்கள் இம் மகஜரில் சேர்க்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சுனாமியால் உயிரிழந்த வடக்கு-கிழக்கின் 37 ஆசிரியர்களது மாதாந்த சம்பளத்தை 14 மாதங்கள் கழிந்த நிலையிலும் வழங்கப்படாதது குறித்து அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் தெரிவித்துள்ளார். (கு)

## தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

### சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்துள்ளதாக சர்வதேச மன்னிப் புச் சபை கவலை தெரிவித்துள்ளது. இலங்கை நிலைமைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடை முறைப்படுத்தப்பட்டது முதல் வன்முறைகள் ஏற்பட்டிருந்தாலும் கடந்த பெப்ரவரி முதல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

இதன் காரணமாக அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளே அதிகம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிழக்குப் பிரதேச வன்முறைகள் தொடர்பில் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் விசாரணை நடத்திய ஜனாதிபதியின் விசாரணைக்குழு, நிலைமைகளைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது. (து)

# தென்மராட்சி பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வி அடைவில் வீழ்ச்சி

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கவலை

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களின் கல்வி அடைவு மிகவும் குறைவாக இருப்பது வேதனை தருவதாகவுள்ளது.

எனவே மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் பணியில் அனைத்து ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். எமது பிரதேசத்தின் நிலையையும் சூழ்நிலையையும் சாட்டாகக் கூறிக்கொண்டு தப்பிக்கக்கூடாது.

இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கைதடி நுணாவிலிலுள்ள அறவழிப் பயிலகத்தில் மேற்படி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட காமன்வெல்த் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் அமுல்செய்யப்படும் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான ஆசிரியர்களின் செயலமர்வில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அறவழிப்போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றும்போது,

தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை இப்போது நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அவ்வகையில், மெல்லக் கற்கும் மாணவர்களை எழுதவும், வாசிக்கவும், சிந்திக்கச் செய்யும் வகையிலும் இந்த நிறுவனம் ஆர்வமுடன் சேவை ஆற்ற முன்வந்துள்ளமையை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

ஆசிரியர் தொழில் தெய்வீகமானது. ஆயினும் நாம் இதனை இன்னமும் சரியாகச் செய்யவில்லை என்றே தோன்றுகின்றது. ஆசிரியர் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் தமது பணியினை ஆர்வமுடன் சிறப்பாகச் செய்ய வேண்டும். மனிதர்களால் இயலாதது என்று எதுவும் இல்லை.

தென்மராட்சி வலயத்தில் இன்று காணப்படுகின்ற கல்விப் பின்னடைவை ஈடுசெய்ய வேண்டும். பிள்ளைகளுடைய அடைவுதான் முக்கியமானது.

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையையும் நன்றாக அறிந்து பிள்ளையின் கல்வியை மேம்படுத்த வேண்டும். இந்த வகையில் அறவழிப் போராட்டக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மெல்லக்கற்கும் மாணவர்களின் திட்டத்தின் வெற்றிக்கு எமது திணைக்களம் அனைத்து உதவிகளையும் ஆதரவையும் வழங்கும் என உறுதியளிக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

காமன்வெல்த் கல்வி நிதியத்தின் மாகாண இணைப்பாளர் வீ.ஸ்ரீசக்திவேல் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது,

இன்று இலவசக் கல்வி அமுல்படுத்தப்பட்டு வருகின்ற போதிலுங்கூட, நாட்டின் கல்வி அபிவிருத்திக்கு ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்கு துணை நிற்கின்றன. ஆனால் இவை சகல மாணவர்கள் இடையே சமநேரத்தில் சம அளவுடன் சென்றடைகின்றனவா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இதேவேளை, ஆசிரியர்கள் பற்றாக் குறையும் மாணவர்களின் கல்வி அடைவில் வீழ்ச்சி ஏற்பட ஒரு முக்கியமான காரணியாகவுள்ளது.

பாடசாலைகளில் கற்கின்ற தரம் 5 மாணவனுக்கு கையொப்பம் வைக்கத் தெரியாத நிலை இருக்குமாயின் நாம் கல்வியில் முன்னேறியுள்ளோம் என்று எப்படிக் கூற முடியும் என்று குறிப்பிட்டார்.

தலைவர் டாக்டர் அருளானந்தம் தமது தலைமையுரையின் போது,

தென்மராட்சி வலயத்தில் கல்வி நிலையை மேம்படுத்தவும் மேலோங்கச் செய்யவும் எதிர்நீச்சல் போட வேண்டும்.

மனதில் ச் ணிவுடன் நம்மால் எதுவும் முடியும் என்ற மனப்பான்மையுடன் ஆசிரியர்கள் செயல்படவேண்டும்.

எங்கெங்கு அரச நிறுவனங்களால் போதிய உதவிகளைச் செய்யமுடியவில்லையோ அங்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்யவேண்டும் என்றார். (க-16)

### நெற் செய்கை பாதிப்பு

(தனங்கிளப்பு)

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, நுணாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற் பயிர் செய்கையில் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற முடியவில்லை என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை காலநிலைச் சீர்கேடு, மற்றும் மாடுகள், பன்றிகள் முதலியவற்றால் நெற்பயிர் அழிக்கப்பட்டமை காரணமாக பாரிய பாதிப்பு இப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

மேலும் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக அறுவடை பாதிப்படையும் என்றும் கூறப்படுகின்றது. (க-37)

### இடமாற்றம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி வங்கி மாகசங்கத்தில் தொடர்ந்து 4 வருடம் கடமை புரிந்தவர்களே இவ்வாறு இடம் மாற்றம் செய்யப்படவுள்ளனரென்றும் இவர்கள் வெளிமாவட்டங்களுக்கும் பிற பிரதேச செயலகங்களுக்கும் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. (க-37)

### பதவி உயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தரம் I இல் கடமைபுரியும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தரம் II க்குப் பதவி உயர்வு செய்யப்படவுள்ளதாகவும் தகைமையின் அடிப்படையிலேயே இப் பதவி உயர்வு வழங்கப்படுமெனவும் தெரிகிறது. (க-37)

# சந்திரிகாவுக்கு எதிரான மனுவை ஏற்பதா? இல்லையா?

## விசாரணை மார்ச் 7இல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கான அரச காணி ஒதுக்கீடு குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஏற்பதா? இல்லையா என்ற விசாரணை மார்ச் மாதம் 7ஆம் திகதி நடைபெறுமென்று உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் மூவரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, சக நீதியரசர் ராஜா பெர்னாண்டோ ஆகிய இருவரையும் கொண்ட நீதியரசர்கள் முன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்ப விசாரணைக்கு வந்தபோது நீதியரசர்கள் குழுத்தலைவர் சரத் என்.சில்வா, அம்மனுவை ஏற்பதா? இல்லையா என்ற விசாரணை அடுத்த மாதம் 7ஆம் திகதி இடம்பெறுமென்று தெரிவித்தார்.

மனுதாரர்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பீற்றர் ஜயசேகர ஆஜரானார்.

இம்மனுவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவருடைய தலைமையிலிருந்த முன்னாள் அமைச்சரவை உறுப்பினர்கள், தற்போதைய அமைச்சரவை உறுப்பினர்கள், அமைச்சரவைச் செயலாளர் ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (து)

### சிறுவர்களுக்குப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத்தினால் சிறுவர்களை கலை ஆளுமையுடனும் கலாசார பண்புகளுடனும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் அவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சிறுவர் ஆளுமையை வளர்த்தெடுக்கும் அரங்கச் செயற்பாடுகள், இசை, நடன, ஓவிய பயிற்சிகள், கலைத்திறன் போட்டிகள், ஆளுமை வெளிப்பாட்டிற்குரிய அரங்கேற்றங்கள், உடல் ஆளுமைக்குரிய விளையாட்டுக்கள் என்பன பயிற்சி நெறியின் செயற்பாடுகளாகும்.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவார்கள். எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறும் அனுமதிகள் இலவசம் எனவும் திருமறைக் கலாமன்ற பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-132,133)

# ஒரு புள்ளியால் சட்டக் கல்லூரி அனுமதி இழப்பு

## உயர் நீதிமன்றில் உரிமை மீறல் மனு தாக்கல்

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற சட்டக்கல்லூரி அனுமதிக்கான நுழைவுப் பரீட்சையில் 68 புள்ளிகளைப் பெற்று ஒரேயொரு புள்ளியால் சட்டக் கல்லூரியில் பயிலும் வாய்ப்பை இழந்த தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகள் இருவர் உயர் நீதிமன்றில் தனித்தனியாக அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

அம்பாறையைச் சேர்ந்த நவரத்தினம் சிவகுமார், காலியைச் சேர்ந்த முஹம்மது மவூன் பாதுமா மதீஹா ஆகியோரே இம் மனுதாரர்களாவர்.

அவர்கள் இம்மனுக்களில் ஒருங்கிணைக்கப்பட்ட சட்டக்கல்லூரிப் பேரவை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு சட்டக்கல்லூரி அனுமதிக்காக நடத்தப்பட்ட அப்போட்டிப் பரீட்சையில் தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகளின் வினாத்தாள்களுக்கான விடைகள் திருத்தப்பட்டதில் குளறுபடிகளும் ஒழுங்கீனங்களும் இடம்பெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் அவர்களது விடைத்தாள்களை மீளத் திருத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

இதேநேரம் மேனகா கேசவன், நிருஷியா செல்வநாதன், நடராஜா செல்வரஞ்சனி ஆகிய தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளும் சட்டக்கல்லூரி அனுமதிக்கான இப்பரீட்சையின் முடிவுகளை ஆட்சேபித்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சையின் மூலம் மயில்வாகனம் கிரேஷியன் என்ற தமிழ்மொழி மூல பரீட்சார்த்தி மாத்திரமே சட்டக்கல்லூரிக்கான அனுமதியைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# புதிய பிரதேச செயலகம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரு பிரிவுகளாக அமைப்பது தொடர்பாக மக்கள் கருத்து அறியும் கருத்தரங்கொன்று அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் கலந்துகொண்டார்.

தென்மராட்சி பிரதேசத்தில் 60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இதில் 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாக ஒரு பிரதேச செயலகம் கொடிகாமம் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

இச் செயலகம் புதிய வருடப்பிறப்புக்கு முன்னர் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-37)

### தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

கொழும்பு ரயில் ஒன்றில் கைக்குண்டுடன் பயணம் செய்த தமிழ் இளைஞன் ஒருவனை தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட அந்த இளைஞன் திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு வந்தபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இளைஞன் பற்றிய விபரங்களை பொலிஸார் வெளியிடவில்லை. (க)

## சிறுபான்மை கட்சிப் பிரதிநிதிகளின்

# பெயர்கள் கிடைத்ததும் அரசியலமைப்பு சபை இயங்கும்

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகளிடமிருந்து பெயர்கள் கிடைத்ததும் அரசியல் அமைப்புச் சபையை மீண்டும் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அனுரபிரிய தர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சிகளின் பெயர்கள் இதுவரை கிடைக்கவில்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இப் பெயர்கள் கிடைத்ததும் அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்வார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

# சுயதொழில் முயற்சி கற்கைநெறி ஆரம்பம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் சங்குவேலி கிராமத்தில் யுவதிகளுக்கென சுயதொழில் முயற்சிகள் கற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளது.

சங்குவேலி யுவதிகளுக்கான இவ் ஒரு வருட பயிற்சி நெறியில், தையற்கலை, விவசாயம், கேக் வடிவமைத்தல், மனைப் பொருளியல், துணியில் வர்ணம் தீட்டுதல், மணப்பெண் தலை அலங்காரம், முக அலங்காரம் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் நடத்தப்பட்டு வரும் இப் பயிற்சி நெறியில் முதற்கட்டமாக 30 யுவதிகள் உள்வாங்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (கு-49)



பாரிஜாதம்: சரண்யா

## வாய்ப்பு

பாலச்சந்தர் கொடுத்த வாய்ப்பினால் நடிகராகி, தயாரிப்பாளராக உயர்ந்திருப்பவர் பிரகாஷ்ராஜ்.

"படத்தில் நடிக்க வாய்ப்புக்கேட்டு அலைந்தபோது பட்ட பாட்டை நினைவில் வைத்துக்கொண்டுதான், நான் தயாரிக்கும் படங்களில் புது டைரக்டர்களையும், புதியவர்களையும் அறிமுகம் செய்கிறேன்" என்கிறார் பிரகாஷ்ராஜ்.

## மீண்டும் அதிரடி



ஆக்ஷன் படங்களில் அதிரடியாக நடித்து புகழ் பெற்ற அர்ஜுனுக்கு சரியான தீனியாக மதராசி படம் அமைந்துள்ளது. மும்பை தாதாவாக அவர் நடித்துள்ளார்.

ஏராளமான அதிரடி காட்சிகள் படத்தில் இடம்பெற்றுள்ளன. மும்பை தாராவி குடிசை காட்சியை அப்படியே தத்ரூபமாக செட் அமைத்து படப்பிடிப்பு நடந்தது. இந்தப் படத்தின் மூலம் மீண்டும் ஒரு கலக்குக் கலக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு அர்ஜுன் இருக்கிறார்.

## மொட்டைத்தலை நவ்யா

சினிமா உலகில் புகுந்த ஒரு பெண் சிறந்த நடிகையாக மாற வேண்டும் என்றால் அந்தப் பெண் சந்திக்க வேண்டியது அதிகம். சந்திக்க வேண்டியதைவிட தியாகம் செய்ய வேண்டியது அதைவிட அதிகம். சில பெண்கள் சினிமாவில் சாதிக்க தங்களையே கூட தியாகம் செய்வது நடக்கத்தான் செய்கிறது.



அந்தவகையில் 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தில் நடித்த மலையாளநடிகை நவ்யா நாயர் ஒரு தியாகம் செய்திருக்கிறார்.

இவர் என்ன தியாகம் செய்தார் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஒரு தமிழ் படத்தில் நடிப்பதற்காக தனது நீண்ட தலை முடியையே தியாகம் செய்திருக்கிறார். அவர் நடிக்கும் 'ஆடும் கூத்து' என்றதமிழ்ப்படம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தப் படத்தில் நாயகியாக நடித்துள்ள நவ்யா நாயருக்கு மொட்டைத் தலையுடன் வரும் கதாபாத்திரம் அமைந்துள்ளதாம். இதற்காகவே இப்படி தனது தலையைத் துணிச்சலுடன் மொட்டை போட்டிருக்கிறார் நவ்யா நாயர்.

இந்த மொட்டைத் தலையுடன் படப்பிடிப்புக்கு வரும் நவ்யா நாயரைப் பலரும் வித்தியாசமாகத்தான் பார்க்கிறார்கள்.

'ஆடும் கூத்து' படத்தின் டைரக்டரும் படப்பிடிப்பாளர்களும் நவ்யாவின் மொட்டைத் தலையை ரொம்பவும் ரசிக்கிறார்கள். 'நவ்யா முன்பு இருந்ததைவிட இப்போது தான் நீங்கள் ரொம்பவும் அழகாக இருக்கிறீர்கள்' என்று கூறுகிறார்களாம்.

நவ்யாவும் 'ஆடும் கூத்து' படத்தை மிகவும் எதிர்பார்த்திருக்கிறார். 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தைப் போல இந்தப் படமும் தனது நடிப்புக்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பது நவ்யாவின் நம்பிக்கை.

## பிரிக்க முடியாத நட்பு

வடிவேலுவிடம் நீண்ட நாட்களாக மானேஜராக இருந்தவர் முருகேசன். கடந்த ஆண்டு இவர் மரணம் அடைந்தர். முதல் - ஆண்டு நினைவு நாளையொட்டி 'கண்ணீர் அஞ்சலி' என்ற தலைப்பில் போஸ்டர்கள் அடித்து சென்னை கோடம்பாக்கம், வடபழனி பகுதியில் ஒட்ட ஏற்பாடு செய்திருந்தார் வடிவேலு.

போஸ்டர்களில் உன்னை என்றும் மறவாத அன்பு நண்பன் வடிவேலு என்று குறிப்பிடப்பட்டுள்ளார். மரணத்தாலும் பிரிக்க முடியாத நட்பு...




'பொன்னரசன்'
மதுவாரியர் – ராகு சந்திரா



'வேட்டையாடு விளையாடு'
கமல் – ஜோதிகா

## ஜோடி மாறியது



பார்த்திபன் தயாரிக்கும் 'பச்சக்குதிரை' படத்தில் அவருக்கு ஜோடியாக பல நடிகைகளை ஒப்பந்தம் செய்ய முயன்றார் என்றாலும், பொருத்தமாக யாரும் அமையவில்லை.

இப்போது பார்த்திபன் ஜோடியாக நமீதா நடிக்கிறார். நமீதாவும் 'கால்ஷீட்' பிரச்சினை காரணமாக கைநழுவி போகும் சூழ்நிலை உருவானது. இப்போது எப்படியோ சமாளித்துப் படப் பிடிப்பில் கலந்துகொண்டிருக்கிறார் பார்த்திபன் படத்தில் கவர்ச்சியை விட நடிப்பை நம்புகிறார் நமீதா...

## டைரக்ஷன் ஆசை



நடிப்புக்காக தேசிய விருது பெற்றவர் மீராஜாஸ்மின். அடுத்து டைரக்ட் செய்வதுதான் எனது கனவு. இதற்காக பிரபல டைரக்டர்களைச் சந்தித்து ஆலோசனை பெற்று வருகிறேன்.

மக்கள் ரசிக்கும் யதாத்தமான படங்களை இயக்கி பெயர் வாங்க வேண்டும் என்பதே ஆசை. இப்போது தூக்கதில் கூட "ஸ்டார்ட்... ஆக்ஷன்.. கட்' என்ற வார்த்தைகள்தான் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்கிறார் மீரா.

## பழைய பாடல் 'ரீமிக்ஸ்'

பழைய படப்பாடல்கள்ளை 'ரீமிக்ஸ்' என்ற பெயரில் புதிய படங்களில் சேர்ப்பது தனி ஸ்டைல் ஆகியிருக்கிறது. ஏற்கனவே, 'சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா', 'இளமை இதோ இதோ', 'ஆசை நூறு வகை', 'தொட்டால் பூ மலரும்', 'என் ஆசை மைதிலியே', 'தங்கப்பதக்கத்தின் மேலே' போன்ற பாடல்கள் மீண்டும் புதுப்பிறவி எடுத்தன.

இப்போது, சிம்பு இயக்கி நடிக்கும் 'வல்லவன்' படத்தில் 'காதல் வந்துருச்சி...' என்ற பாடலும், 'மதராஸி' படத்தில் 'அதோ அந்தப் பறவை போல' என்ற பாடலும் 'கள்வனின் காதலி'யில் 'நேற்று ராத்திரி யம்மா' பாடலும் 'ரீமிக்ஸ்' ஆக ஒலிக்கப்போகின்றன.

## சினிமாச் சிதறல்



'கொக்கி'
கரண் – சஞ்சனா


## தாராளமாகப் பழகும் நயன்தாரா



நயன்தாரா தன்னுடன் நடிக்கும் ஹீரோக்களிடம் மட்டுமல்ல, சந்திக்க வரும் ரசிர்களிடமும் தாராளமாகப் பழகுகிறார். கை குலுக்க விரும்பும் ரசிகர்களிடம் கை குலுக்கி மகிழ்கிறார்.

சிறுவர்களைக் கட்டிப்பிடித்தும், கிள்ளியும் விட்டு குதூகலப்படுத்துகிறார். சந்திக்க வரும். பெண் ரசிகர்களிடமும் சிரித்துப்பேசி அசத்துகிறார். நயன்தாராவை சந்திக்கும் ரசிகர்கள் அவர் சாதாரணமாக பழகுவதைக் கண்டு மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் துள்ளிக் குதிக்கிறார்கள்.

தனது சம்பளத்தின் ஒரு பகுதியை ஆதரவற்றோருக்கு நயன்தாரா வழங்குவது கூடுதல் தகவல்.



'சரவணா'
சிம்பு – ஜோதிகா

# பரமசிவன்



## திரை விமர்சனம்

தேசப்பற்று மிக்க ஒருவனை வைத்து தீவிரவாதிகளை அழிக்கும் கதை.

நான்கு பொலிஸாரைச் சுட்டுக் கொன்ற சுப்பிரமணிய சிவா கொலைத் தண்டனைக் கைதி. ஜெயிலில் இருக்கும் அவன் தேசியக் கொடியை அவமதிக்கும் ரவுடிகளைப் புரட்டி எடுக்கிறான். பூங்காவில் குண்டு வைக்கும் தீவிரவாதிகளை அழிக்க அடையாளம் தெரியாத ஒருவனை உருவாக்க பொலிஸ் அதிகாரி நந்தகுமார் திட்டமிடுகிறார். அதற்காக சுப்பிரமணிய சிவாவை இரகசியமாக ஜெயிலில் இருந்து விடுவிக்கிறார்.

அவன் தப்பிச் செல்லும்போது ஜெயிலில் வார்டன் சுட கீழே விழும் சிவா இறந்துவிட்டதாக வெளி உலகத்துக்குச் சொல்லப்படுகிறது.

ஊட்டியில் உள்ள பொலிஸ் அதிகாரி வீட்டில் அவன் தன் பெயரை பரமசிவன் என்று மாற்றிக்கொண்டு தங்கியிருக்கிறான். அதே வீட்டில் இருக்கும் மலர் என்ற பெண்ணை நிச்சயம் செய்ய வரும் ஒருவன் தீவிரவாதி என்று தெரிய வந்ததால் பரமசிவன் கொலை செய்கிறான். அந்தப் பெண்ணையே அவன் கைபிடிக்கும் சூழ்நிலை உருவாகிறது.

இந்த நிலையில் தீவிரவாத கும்பல் ஒன்று உயர் பொலிஸ் அதிகாரி குடும்பத்தைச் சுற்றிவளைக்க அவர்கள் அனைவரையும் நந்தகுமார் உதவியுடன் சுட்டு வீழ்த்துகிறான். இன்னும் 5 தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுகளாக செயல்பட்டு தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிபுணர்கள் மாநாட்டை சீர்குலைக்கத் திட்டமிடுவது அவனுக்குத் தெரிகிறது. அவர்களின் கதையையும் பரமசிவன் முடிக்கிறான்.

ஜெயிலில் இருந்து ஆயுள் தண்டனை கைதி தப்பியது தெரிய வந்தால் தங்களுக்கு பிரச்சினை என்று முடிவு செய்து பொலிஸ் அதிகாரிகள் பரமசிவனைச் சுட்டுக்கொல்ல முடிவு செய்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் சி.பி.ஐ அதிகாரி ஒருவருக்குப் பரமசிவன் ஜெயிலில் இருந்து தப்பியதும் அதற்கு 2 பொலிஸ் அதிகாரிகள் உடந்தையாக இருந்ததும் தெரிய வருகிறது.

பரமசிவன் சுடப்பட்டானா? ஜெயிலில் இருந்து தப்பிக்க உதவிய பொலிஸ் அதிகாரிகள் சி.பி.ஐ பிடியில் சிக்கினார்களா? பரமசிவன் கைப்பிடிக்க முன் வந்த மலரின் நிலை என்ன என்ற கேள்விகளுக்கு விடை தருவது கிளைமாக்ஸ்.

சுப்பிரமணிய சிவா, பரமசிவன், ஈஸ்வர் என்ற 3 பெயர்களில் மிரட்டியிருக்கிறார் அஜித். ஜெயிலில் அந்நியன் ஸ்டைலில் வந்து ரவுடிகளைப் பந்தாடும் முதல் காட்சியிலேயே அவரது ரசிகர்களின் ஏக்கத்துக்கு விருந்து படைக்கிறார். குடும்பத்தை நினைத்து உருகும்போது உணர்ச்சி பிழம்பாகிறார். தீவிரவாதிகளை வேட்டையாடும்போது வேங்கையாக சீறுகிறார். மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் சென்று மனித வெடிகுண்டுகளை மடக்கும் சாதனை அஜித்தால் மட்டுமே சாதிக்கக்கூடிய ஒரிஜினல். விட்ட இடைவெளிக்கெல்லாம் வட்டியும் முதலுமாக படம் முழுவதும் விதம் விதமாக வித்தைகள் செய்து ரசிகர்களைப் பரவசப்படுத்தியிருக்கிறார்.

பொலிஸ் சுப்பிரண்ட் நந்தகுமாராக வாழ்ந்து அசத்தியிருக்கிறார் பிரகாஷ் ராஜ். அவரது பேச்சும் நடை உடை பாவனையும் யதார்த்தம். கடமை தவறாத ஒரு பொலிஸ் அதிகாரியை அப்படியே கண்முன் கொண்டு நிறுத்துகிறார். மணக்க போகும் பெண்ணுடன் தப்பி ஓடும் பரமசிவனைச் சுடுவதற்காக விரட்டிச் செல்லும் அவர், எடுக்கும் திடீர் முடிவு கதையின் திருப்பம். அதை சொல்லும் விதம் அற்புதம்.

லைலா வழக்கம்போல வெகுளிப்பெண்ணாக வந்து சிரிக்க வைக்கிறார். சித்தி ஐஸ்வர்யா கோபப்படுவதையும் வீட்டில் மற்றவர்கள் சொல்வதையும் சீரியசாக எடுத்துக்கொண்டு அவர் எடுக்கும் முடிவு உருக்கம்.

'அக்னி புத்ரன்' விவேக் பொலிஸ் இன்ஸ்பெக்டராக வந்து கலாட்டா செய்து சப் இன்ஸ்பெக்டராக பதவி இறக்கம் பெறுவது கலகலப்பு. சி.பி.ஐ அதிகாரியின் உதவியாளராக வந்தும் ஊசி வெடிகளை கொளுத்தி வீசுகிறார்.

அறிமுக வில்லன் நவீன் பொருத்தம். அவினாஷ், பவானி சங்கர், ராஜேஷ், நாசர், கீதா, ஐஸ்வர்யா, சந்தான பாரதி, மயில்சாமி உட்பட வந்தவர்கள் அனைவரும் பரமசிவன் கை ஓங்க குரல் கொடுத்திருக்கிறார்கள்.


கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: பி.வாசு. தான் திறமையான டைரக்டர் என்பதை வித்தியாசமாகக் கதை சொல்லி பொருத்தமாக காட்சிகள் அமைத்து காலத்துக்கு ஏற்ப வசனங்களைச் சேர்த்து நிரூபித்திருக்கிறார். காட்சிகளை விறுவிறுப்பாக நகர்த்தி அஜித்துக்கு வேகம் சேர்த்திருக்கிறார்.

சேகர் ஜோசப்பின் கமரா மிரள வைக்கிறது. இசை: வித்யாசாகர். பாடல்கள் பரவாயில்லை. பின்னணி இசை கச்சிதம். ஸ்டண்ட்: தளபதி தினேஷ் பிரமிக்க வைத்திருக்கிறார்.



***ஆங்கில பட பாணியில் அட்டகாசம் செய்யும் பரமசிவன் – அஜித்தின் புது அவதாரம்.***

# பரத் பயிற்சி



டைரக்டர் ஷங்கர் தயாரிப்பில், பரத் கதாநாயகனாக நடிக்கும் 'வெயில்' படப்பிடிப்பு முழுவதும் நெல்லையில் நடைபெறுகிறது. கதை பெரும்பாலும் சினிமா தியேட்டரில் நடப்பது போன்று காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நெல்லை தியேட்டர்களில் படப்பிடிப்பை நடத்துகிறார்கள்.

பரத் நெல்லை தமிழ் பேசி நடிக்கிறார். அதற்காக பயிற்சியும் பெற்று வருகிறார்.

பாக்யராஜ் மகள் சரண்யா 'எடிட்டிங்' செய்வதிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

* * *

உச்சரிப்பு தவறாக இருந்தாலும் எல்லோரிடமும் நமீதா முழுக்க முழுக்க தமிழில்தான் இப்போது பேசுகிறார்.

* * *

**'வேட்டையாடு விளையாடு' படத்தில் உதவி பொலிஸ் கமிஷனராக வரும் கமலின் பெயர் ராகவன்.**

* * *

'ஆடும் கூத்து' படத்தில் நவ்யாநாயர் சொந்தக் குரலில் பேசுகிறார்.



'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது'
மல்லிகாகபூர்

# மும்தாஜின் சாகசம்



டி.ராஜேந்தரின் 'வீராசாமி' படத்துக்குப் பிறகு வேறு வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த மும்தாஜுக்கு 'ஜெர்ரி' என்ற படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

அதில் மும்தாஜ் பல்வேறு சாகசங்களை நிகழ்த்தி நடித்து இருக்கிறாராம். ஒரு காட்சியில் அவர் உயரமான கட்டடத்தில் இருந்து குதிக்க வேண்டும். இதற்காக டைரக்டர் டூப்பை ஏற்பாடு செய்தார். ஆனால் மும்தாஜ் அதற்கு சம்திக்கவில்லை. நானே குதிக்கிறேன் என்று கூறி அதன்படி குதித்து எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

ஏற்கனவே மும்தாஜ் படப்பிடிப்பில் எந்தப் பிரச்சினைகளும் வைத்துக்கொள்வது இல்லை. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே வந்து விடுவார். இதனால் நல்ல பெயர் இருந்தது. இப்போது ரிஸ்க் எடுத்து நடித்து மேலும் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளார்.


# சொல்ஹெய்மின் வருகையும் ஏற்பட்டுள்ள நம்பிக்கையும்

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அதிகரித்த வன்முறைகள் காரணமாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. இதில் படையினர், பொதுமக்கள், புலிகள் என சகலரும் அடங்குவதாக தெரிவிக்கப் படுகின்றது. இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. இம்மோதல்கள், தாக்குதல்கள் மீண்டுமொரு யுத்தத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற பயத்தினால் மக்கள் தவித்த வேளையில் தான் நோர்வேயின் சமாதான தூதர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் இடம்பெற்றது.

தனது விஜயத்தின் போது ஜனாதிபதியை சந்தித்து தற்போதைய சூழல் குறித்தும், இடம்பெறவுள்ள பேச்சு குறித்தும் கருத்துக்களை பெற்றுக்கொண்ட அவர் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் தரப்புக்களை சந்தித்திருந்தார். குறிப்பாக முஸ்லிம் காங்கிரசானது பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவது குறித்து எரிக் சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியதாக தெரிவித்தது.

அதேபோல எரிக்சொல்ஹெய்ம் தனது விஜயத்தின் முக்கிய நோக்கமான கிளிநொச்சி விஜயத்தின் போது பேச்சுக்கான இடம் குறித்து தீர்மானிப்பதில் வெற்றி கண்டார். குறிப்பாக விடுதலைப்புலிகள் நோர்வேயில் பேசவேண்டும் என்ற முடிவிலிருந்து இறங்கி ஜெனீவாவில் பேசுவதற்கு உடன்பட்டமையானது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானதாக அமைந்தது. இது குறித்து சமாதான தூதர் எரிக்சொல்ஹெய்ம் குறிப்பிடும்போது,





"போர்நிறுத்த மீறல்கள் அனைத்தும் இலங்கை மக்கள் மத்தியில் பெரும் பயத்தினை உருவாக்கியுள்ளது. இருசாராரும் இவ்வன்முறைகளை எவ்வாறு குறைத்து கொள்வது என்பது பற்றி கூடிக்கலந்துரையாட வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளனர். நேற்றைய தினம் அரசாங்கமும் இன்று விடுதலைப்புலிகளின் தலைமையிடமும் பேச்சுக்களை சிரமமின்றி சுவிற்சலாந்தில் வைக்கலாமென நோர்வே ஆலோசனை கூறியது. தொடர்ச்சியாக சமாதான முன்னெடுப்புகளிற்கு சுவிஸ் அரசாங்கம் ஆதரவளித்துள்ளது. மிகுந்த நெகிழ்வான போக்கையும் தயார் தன்மையையும் இவ்வரசாங்கம் காட்டி வந்துள்ளது. ஆகவே இரு சாராரும் சுவிற்சலாந்தில் பேச்சுக்களை நடாத்த ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்." எனத் தெரிவித்தார்.

அதேபோல இதுகுறித்து கலாநிதி அன்டன் பாலசிங்கம் "இதுவரை காலமும் ஏதோ விடுதலைப்புலிகள் இந்த பேச்சு எந்த இடத்தில் நடத்துவது என்பது தொடர்பாக, அதாவது நோர்வேயில்தான் நடத்த வேண்டும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்து கடும் போக்கை கடைப்பிடிக்கிறார்கள் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவி வந்தது. ஆனால் உண்மையில் நாங்கள் விட்டு கொடுத்து அதாவது நோர்வே அரசாங்கம் எங்களை கேட்டு கொண்டதற்கு இணங்க ஐரோப்பிய நாடொன்றான சுவிற்சலாந்தில் இந்த பேச்சுக்களை நடத்த இணங்கியிருக்கிறோம்." என்று தமது முடிவினை வெளிப்படுத்தினார்.

எவ்வாறெனினும் நாட்டில் சகல. மக்களும் சமாதானத்தை தவிர வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. இதனை விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உணர்ந்து நிபந்தனைகள், பிடிவாதங்களை தளர்த்தி விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு ஜெனீவா பேச்சுக்களை வெற்றி பெற செய்ய வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

- ஜீ. யோகப்பிரியா

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 16

1. முழுவயதடைந்த ஆண்களும், பெண்களும் இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமான கட்டுப்பாடு எதுவுமின்றி திருமணம் செய்வதற்கும், ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணம் செய்யும் பொழுதும், திருமணம் ஆகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு.

2. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமானதும், முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

3. குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும், அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

# சமரசத்தை விட நிரந்தர தீர்வே முக்கியம்



தர்கா நகரில் இடம்பெற்றுள்ள வன்முறைகள் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் ஒரு தொடர்ச்சியாகவே கணிக்கப்படவேண்டியுள்ளது. இடம்பெற்ற இந்த வன்முறைகள் மிக . நீண்ட காலமாக இப்பகுதிகளில் ஒற்றுமையாக வாழ்ந்த சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே கசப்புணர்வுகளையும் மனத்தாக்கங்களையும் ஏற்படுத்தியன.

அளுத்கமை தர்கா நகரில் கையடக்க தொலைபேசி நிலையத்தில் திருட்டு முயற்சியின் போது ஏற்பட்ட தகராறே இந்த வன்முறைகளின் பின்னால் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் இந்த தகராறு இத்தனை பாரிய கலவரமாக உருவெடுத்தமைக்கு பொறுப்பற்ற காவல்துறையின் நடவடிக்கைகளே காரணமாக இருந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இக்கலவரங்களை அடுத்து இப்பகுதிகளுக்கு விஜயம் செய்த அரச தரப்பு பிரதிநிதிகள் நிலமையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். முடிந்தளவு மக்களை அமைதிப்படுத்தியதுடன் வன்முறைகள் மேலும் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டுள்ள போதும் நாட்டில் இவ்வாறு அடிக்கடி இடம்பெறுகின்ற சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை தடுப்பதற்கான முயற்சிகள் ஏதும் இந்நாட்டில் இல்லை என்பது கவலைக்குரியதாகும். தாக்குதல்கள் இடம் பெறுவதும் பின்னர் சமரசம் செய்யப்படுவதும் ஒருபோதும் இவ்வாறான பாதிப்புக்களுக்கு தீர்வாக அமையப்போவதில்லை. அத்துடன் இந்நாட்டில் சிறுபான்மை இனங்கள் தொடர்ந்தும் அச்சநிலையில் வாழும் நிலைக்கு தள்ளுவதானது நிரந்தர சமாதானத்தை பாதிக்கும் என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டிய தருணம் இதுவாகும்.

- இக்பால் அஜீட்

## சுமார் நான்கு வயது சிறுமி ஒருத்தியின் நாட்குறிப்பில் இருந்து

நாளை கட்டை அவிழ்ப்பார்கள்
எனக்கு யோசனையாக இருக்கிறது
எஞ்சியிருக்கும் என் ஒற்றைக் கண்ணால்
அப்பிள் பழத்தின் ஒரு பாதியை மட்டும்
தோடம்பழத்தின் ஒரு பாதியை மட்டும்
என் தாயின் பாதி முகத்தை மட்டும்தான்
என்னால் பார்க்க முடியுமா?
துப்பாக்கிகுண்டை நான் பார்க்கவில்லை
என் தலைக்குள் வெடித்த
அதன் வலியை மட்டுமே உணர்ந்தேன்
பெரிய துப்பாக்கியுடன்
நடுங்கும் கைகளுடன்
கண்களில் ஒரு வெறித்த பார்வையுடன்
அந்த ராணுவ வீரன்
என் மனதில் அழியாதிருக்கிறான்
அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை

என் மூடிய கண்களால் இவ்வளவு தெளிவாக
அவனைப் பார்க்க முடியுமென்றால்
எங்கள் தலைகளுக்குள்ளே
நாம் இழக்கும் கண்களை ஈடுசெய்ய
இன்னும் ஒரு சோடிக் கண்கள் உள்ளன
போலும்

அடுத்த மாதம் என் பிறந்த நாளுக்கு
முற்றிலும் புதியதோர் கண்ணாடிக் கண்
எனக்குக் கிடைக்கும்
சில வேளை பொருட்கள் நடுவில் தடித்தும்
வட்டமாயும் தெரியக்கூடும்
நான் விளையாடும் கண்ணாடிக் குண்டுகள்
ஊடே
உற்றுப்பார்த்திருக்கிறேன்
அவை உலகத்தை விநோதமாய்க் காட்டும்

நான் கேள்விப்பட்டேன்
ஒன்பது மாதக் குழந்தை ஒன்றும்
ஒற்றைக் கண்ணை இழந்ததாக

என்னைச் சுட்ட ராணுவ வீரன் தான் -
தன்னை உற்றுப்பார்க்கும்
சின்னஞ் சிறுமிகளைத் தேடும்
ஒரு ராணுவ வீரன் தான் -
அவளையும் சுட்டானோ என்று
எனக்கு யோசனையாக இருக்கிறது

நானோ வளர்ந்தவள்
கிட்டத்தட்ட நாலு வயது
போதிய அளவு நான்
வாழ்க்கையைப் பார்த்துள்ளேன்
ஆனால் அவளோ சின்னக் குழந்தை
எதுவும் அறியாச் சின்னக் குழந்தை

(ரஷா ஹெவ்சிய்யே 1988 மார்ச் மாதத்தில் ஒரு கண்ணை இழந்தாள். இஸ்ரேல் வீரன் ஒருவன் றப்பர் குண்டுகளால் சுட்டபோது அவள் கண்ணை இழக்க நேர்ந்தது. அச்சமயம் றமல்லாவுக்கு அண்மையில் உள்ள அல் - பிறைஹ் என்ற ஊரில் பாட்டியின் வீட்டு மாடியில் ரஷா நின்று கொண்டிருந்தாள். அச்சமயம் அதே போன்று . வேறு இரண்டு குழந்தைகளும் ( இருவரும் 9 மாத வயது உடையவர்கள்) ஒவ்வொரு கண்ணை இழந்தனர். இன்திபாதா இயக்கத்தின் ஏழாவது மாதத்தொடக்கத்தில் சுமார் 40பேர் இதேபோல் பாதிக்கப்பட்டனர்.)

- தமிழில் எம். ஏ. நுஃமான்
நன்றி :- 'பலஸ்தீனக் கவிதைகள்'

## கருத்தாடல் களம்

### பாதிக்கப்பட்ட மனதின் குமுறல்

பேருவளை தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதல்கள் காலங் காலமாக சிங்கள மக்களோடு கூடிவாழும் முஸ்லிம்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கடந்த காலங்களிலும் இது போன்ற தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இவற்றை தடுக்க இந்த நாட்டில் எதுவித செயற்திட்டமும் இல்லை என்பது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாகும். பெரும்பான்மை இனம் என்பது ஆளப்பிறந்தது என்பதும் சிறுபான்மை இனம் என்பது அடங்கி வாழவேண்டும் என்பதும்தான் அவர்களது எண்ணமாக இருந்தால் நிச்சயம் அது இந்த நாட்டின் எதிர்கால சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் எனச்சொல்லிவைக்க விரும்புகிறோம்.

முகமட் அன்சார்
அளுத்கமை

### நிம்மதிப் பெருமூச்சு

மீண்டுமொரு போர் மூண்டுவிடுமோ என்ற பயத்தில் தவித்த மக்களுக்கு ஜெனீவாவில் பேச்சு என்ற செய்தியானது பெரும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. எனினும் வழமைபோல பேச்சுக்களுக்கான சூழல் ஏற்படும் போது அதனை குழப்ப முயலுகின்ற சக்திகள் இம்முறையும் பல்வேறு கருத்துகளைக் கூறி பிரச்சனைகளை ஏற்படுத்த முயலுகின்றன. வன்முறைகள் நிகழும் போது, உயிர்கள் பலியெடுக்கப்படும் போது, பேசாமல் இருந்து விட்டு, இப்போது ஏதாவது நல்லது நடக்கக்கூடிய சூழலில் பிரச்சினையை கிளப்புவது மிகவும் அநியாயமான செயலாகும்.

எம். எழில்வேந்தன்
ஹட்டன்

## இவ்வார விழிப்பில்...

- தமிழர் புனர் வாழ்வு கழக உறுப்பினர் கடத்தலும் சமாதான பேச்சின் எதிர்காலமும்
- மக்களின் சமாதான அழைப்பு
- மாவனல்லையில் புரிந்துணர்வு நடவடிக்கை
- பன்விலை தமிழரும் பயங்களும்
- யாழ் ஓவியரின் கொழும்புக் கண்காட்சி

## வாசகர் கவனத்திற்கு...

**கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.**

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் .எதிர் பார்க்கிறோம்.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

# விழிப்பின் பதிவுகள்

TV வலம்புரி

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு **7.25** மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு **7.30** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

40 மின்பார்வை



அப்போது எனக்கு ஒரு புகலிடமான பக்கபலம் தேவைப்பட்டது. ஏதாவது பிரச்சினை என்றால்ஒரு நண்பனைத் தேடுவோம். அல்லவா? அதுபோல் நானும் ஒரு வழிகாட்டியைத் தேடினேன். அப்போது எனக்கு ஒருவர் கிடைத்தார். அவர்தான்பெருந்தலைவர் காமராஜர் ஆகையால்தான் காமராஜருடன் சேர்ந்தேன். நான் ஒரு தேசியவாதி அப்போது காங்கிரஸில் தேசியம் கலந்த அரசியல் இருந்தது. காங்கிரஸில் அதற்குக் காமராஜர் தலைமை வகித்தார் .எனவே அந்தக் கட்சியில் சேர்ந்தேன். அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டேன். என்னை தி.மு.க.காரர்கள் தூக்கிக் கொண்டு போய் காங்கிரஸில் இீப்போட்டார்கள். நான் காங்கிரஸுக்கு போகக் காரணமாய் இருந்தவர்கள் அவர்கள்தான். அன்று முதல் காமராஜர் அவர்கள் சாகும் வரை நான் அவருடன் காங்கிரஸில்தான் இருந்தேன்.



மக்களைப் பெற்ற மகராசி படத்தில்வி.கே.ராமசாமியுடன்....

டி.எஸ்.என். இந்தக் காலகட்டத்தில் இது போன்ற ஒரு சம்பவம் நடந்தால் உங்களுடைய சொந்த வாழ்க்கையோ அல்லது திரைப்பட வாழ்க்கையோ பாதிக்கப்பட்டதா?

சிவாஜி: Never ஒரு போதும் இல்லை. எனது திரைப்பட வாழ்க்கை நிச்சயமாகப் பாதிக்கப்படவே இல்லை. என்றைக்கு என்னைத் திருப்பதி, கணேசா, கோவிந்தா என்று கேலி செய்தார்களோ அன்றே திருப்பதி ஆண்டவன் கண்விழித்துப் பார்த்து அருள்புரிந்துவிட்டார்.

அதன் பின்புதான் நான் ஸ்டுடியோவிலேயே 24 மணிநேரமும் தங்கி மூன்று ஷிஃப்ட்டாக வேலை செய்தேன் . பெற்றோரை மனைவியைப் பார்க்கவில்லை. எனது குழந்தைகளைப் பார்க்வில்லை. ஸ்டுடியோவினுள்ளேயே இருந்தேன்.

நான் நடித்த படங்களெல்லாம் மாபெரும் வெற்றிப்படங்களாக அமைந்தன மக்கள் பாராட்டைப் பெற்று விருதுகள் வாங்கித்தந்தன. மக்களைப் பெற்ற மகராசி ,வணங்காமுடி ,தங்கமலை ரகசியம், அம்பிகாபதி, உத்தமபுத்திரன் போன்ற படங்கள் அப்போதுதான் வெளிவந்தன.


ஒரு வேளை அவர்கள் திருப்பதி கணேசா கோவிந்தா என்று சொன்னதால்தான் நான் இந்த வெற்றிகளையெல்லாம். பெற்றேனோ என்னவோ? அதற்கு முன்பு கட்சி அது, இது என்ற சுற்றிக் கொண்டிருந்தேன். என்னை தி. மு. க. வினர் ஒதுக்கிவைத்த சம்பவத்திற்குப் பின்புதான் என் நாடக திரைப்பட வேலையை முழுமையாகக் கவனித்தேன் அதனால் என் படங்களும் வெற்றிபெற்றன.



கலாட்டா கல்யாணம் படத்தில் ஜெயலலிதாவுடன்...(1968)

டி.எஸ்.என்: இதே காலகட்டத்தில் உங்களை வைத்து தி. மு.க.காரர்களும் படம் எடுத்தார்கள் அல்லவா?

சிவாஜி: ஆமாம்! அந்த நேரத்தில் என்னை வைத்து தி.மு.கக்காரர்களும் படம் எடுத்தார்கள். உதாரணமாக கலைஞரை எடுத்துக்கொள்ளுங்கள் அவர் குறவஞ்சி என்ற படம் எடுத்தார். எஸ்.எஸ். ராஜேந்திரனை வைத்து அந்த படத்தை ஆரம்பித்தார். அவருக்கும் கலைஞருக்கும் ஏதோ பிரச்சினை போலிருக்கிறது. உடனே கலைஞர் என்னிடம் வந்து கணேசா! நீங்களே இந்த படத்தில் நடிக்க வேண்டும் என்றார். முதலில் என் நண்பன் ராஜேந்திரனை வைத்து படம் எடுதுள்ளீர்களே அவர் உங்கள் கட்சிக்காரர் அல்லவா? நான் இதில் நடித்தால் அவர் ஏதாவது நினைக்கமாட்டாரா? என்று கேட்டேன். அதற்கு கலைஞர் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை எனது நண்பன் என்ற முறையில் இந்த குறவஞ்சி படத்தில் நீங்கள்தான் நடிக்க வேண்டும் என்றார். அவர் சொன்னது போலவே நானும் அந்தப் படத்தை நடித்துக் கொடுத்தேன். அவருக்காக புதையல் என்ற படத்திலும் நடித்தேன் . எதற்கு சொல்கிறேன் என்றால் என்னை அவர்கள் தூக்கிப் போட்டதினால் எனக்கு இலாபம்தான் அவர்களுக்குத் தான் நஷ்டம்.



தெய்வப் பிறவிபடத்தில் எஸ்.எஸ். ராஜேந்திரன், பத்மினியுடன் (1960)

## பரதனைக் கண்டேன்

டி.எஸ்.என்: இந்தக் காலகட்டத்தில் நீங்கள் நடித்த படங்களில் ஒரு புராணப் படமும் உண்டு . அது சம்பூர்ண இராமாயணம் அதில் ஒரு சிறிய பாத்திரத்தில் நீங்கள் பரதனாக நடித்தீர்கள் அல்லவா?

சிவாஜி: முதலில் நடிப்பில் சிறிய பாத்திரம் பெரிய பாத்திரம் என்ற பாகுபாடு கூடாது அதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒரு சீன் வந்தாலும் மக்கள் மனதில் நிற்கும்படி நடிக்க வேண்டும். இராமாயணக் கதையில் நான் ஏற்காத பாத்திரங்களே கிடை யாது. சீதா, சூர்ப்பனகை, பரதன் ,இந்திரஜித் எனப் பல வேஷங்கள் போட்டதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். சம்பூர்ண இராமாயணம் படத்தில் இராமராக என். டி.ராம ராவ் நடித்தார். அதில் நான் பரதனாக நடித்தேன். இப்படத்தை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பார்க்க நேர்ந்தது. பொதுவாக அவர் சினிமாவெல்லாம் பார்க்கமாட்டார் இராமாயணம் என்றதும் பார்த்தார். படம்பார்த்துவிட்டு வெளியே வந்தவரிடம் படம் எப்படி இருக்கிறது? என்று கேட்டதற்கு அவர் வேறொன்றுமே சொல்லாமல் பரதனைக் கண்டேன் என்றார். அது போதாதா எனக்கு எவ்வளவு பணம் புகழ் சம்பாதித்தாலும் மாமேதை இராஜாஜி அவர்கள் சொன்ன இந்த பாராட்டு வார்த்தைகளுக்கு ஈடாகுமா?

(தொடரும்)

# சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு முல்லையில் அடிக்கல் நாட்டல்






(முல்லைத்தீவு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள செம்மலை கிழக்கு கிராமத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் கிளையின் அனுசரணையின் கீழ் ஜேர்மன் ஸ்மாலன் பேர்க் நகர மேஸ் சோட் நகரப் பாடசாலையின் நிதியுதவியுடன் இப் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச்சேவைப் பணிப்பாளர் வின்சன் உட்பட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் செம்மலைக் கிராமத் தலைவர் சமூக ஆர்வலர்கள் மற்றும் அக் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (து)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி கல்வியங் காட்டுப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு சி ல தினங்களாக தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகின்றமை தெரிந்ததே ,

அதற்கமைய நாளை மறுதினம் செய்வாய்க்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் 9.30 மணிவரை திருநெல்வேலி அம்பன் கோவில் சன சமூக நிலையத்திலும் சிவன்அம்மன் வீதியிலுள்ள வீடுகளிலும், தொடர்ந்து 10 மணிதொடக்கம் 11.30 மணிவரை தாழையடி வீதி சன சமூக நிலையத்திலும் நேசிங்கோம் வீதியிலும், 12 மணிதொடக்கம் 1.30 மணிவரை பரமேஸ்வரா பல்கலைக்கழக வீதியிலும், வளாகவீதி சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளன. (க-7)

# முகாமைத்துவ சேவைப்போட்டி

(சாவகச்சேரி)

நாட்டின் உள்ளூராட்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் மாவட்ட, மாகாண தேசிய ரீதியிலான முகாமைத்துவ சேவை தொடர்பான போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்டு போட்டித்தன்மையுடன் திகழச்செய்யவும், செயலாற்றுகையை அதிகரிப்பதன் மூலம் வினைத்திறன் மிக்க பயன்வாய்ந்த சேவையை பொதுமக்களிற்கு நல்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களை வழி நடாத்தும் நோக்குடனும் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாண த்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டியை மாவட்ட ரீதியாக நாடத்தி பின் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கிடையில் ஓர் மாகாண மட்டப் போட்டியும் நடாத்தப்படவுள்ளது. மாநகர, நகர சபைகளுக்கிடையான போட்டி மாகாணமட்டத்தில் தனித்தனியாகநடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் சபைகளிற்கு மாகாண சபையால் விருதுகளும், தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் சபைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சினால் விருதுகளும் வழங்கப்படவுள்ளன

அத்தோடு உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும் சான்றுகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபைகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையும் நடைபெறும். பிரதேச நகர மாநகர சபைகளுக்கிடையான மாகாண மட்டப் போட்டித் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி 2004ஆம் ஆண்டுக்குரிய ஓர் முகாமைத்துவ மதிப்பீடு என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# 100 சடலங்கள் இதுவரை மீட்பு

(கெய்ரோ)

செங்கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து 100பேர் காப்பாற்றப்பட்டனர்.

சவுதி அரேபியாவில் உள்ள துபா துறைமுகத்தில் இருந்து, எகிப்து நாட்டில் உள்ள சபாகா துறைமுகத்துக்கு 'அல்சலாம் பொகாசியோ 98' என்ற பயணிகள் கப்பல் புறப்பட்டுச் சென்றது. அந்தக் கப்பலில் 1,400பேர் இருந்தனர்.

அந்தக் கப்பல் செங்கடலில் சென்ற போது, கப்பலுக்குள் தண்ணீர் புகுந்த தனால் அந்தக் கப்பல் மூழ்கி விட்டது. ஹர்காடா என்ற இடத்தில் இருந்து 57கடல் மைல் தூரத்தில் இந்தச் சம்பவம் நடந்தி ருக்கிறது.

இந்தத் தகவல் கிடைத்ததும் மீட்புப் பணி துரிதப்படுத்தப்பட்டது. கப்பல் மூழ்கிய இடத்துக்கு மீட்புப் படகுகளும், ஹெலி கொப்டர்களும் அனுப்பப்பட்டன. கடலில் உயிருக்குப் போராடியபடி கிடந்த ஏறத் தாழ 100 பயணிகள் உயிருடன் மீட்கப் பட்டனர். 100 உடல்களும் கடலில் இருந்து எடுக்கப்பட்டன. தொடர்ந்து மீட்புப் பணி நடந்து வருகிறது. கப்பலில் இருந்தவர் களில் பெரும்பாலானவர்கள் இறந்து விட்டதாகக் கருதப்படுகிறது.மீட்புப் பணிக்கு இங்கிலாந்து தனது போர் கப்பலை அனுப்பி இருக்கிறது.

செங்கடலில் பலத்த மழையும், சூறா வளி காற்றும் வீசியதாகவும், இதனால் கப்பலை மாலுமிகள் சீராக செலுத்த முடியவில்லை என்றும் தெரிகிறது. இதன் காரணமாக கப்பல் மூழ்கியதாகத் தெரிய வருகிறது. (து)



பிரான்ஸ் நாட்டில் நூற்றுக்கணக்கான உடற்கல்விப் பேராசிரியர்களின் பதவிகள் காலி செய்யப்பட்டன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெற்கு பிரான்ஸில் மார்செய்ல் நகரில் உடற்கல்வி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். இதில் அரசை எதிர்த்து கோஷம் எழுப்புகிறார் ஒரு மாணவர்.

# படப்பிடிப்பு நெரிசலில் சிக்கி 66 பேர் பரிதாப மரணம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள ஒரு ஸ்டேடியத்தில் டெலிவிஷன் நிகழ்ச்சி படப்பிடிப்பு நடந்தது.



நேயர்களிடம் நேரடியாக பேட்டி எடுத்து ஒளிபரப்பும் நிகழ்ச்சி என்பதால் மிகப் பெரிய அல்ட்ரா ஸ்டேடியத்தில் கடந்த புதன் கிழமையில் இருந்தே மக்கள்கூடியிருந் தனர். பெண்கள் ஆர்வத்துடன் மிக அதிக அளவில் திரண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் நிகழ்ச்சி படப்பிடிப்பு நடந்துகொண்டு இருந்தபோது திடீரென்று வெடிகுண்டுப் புரளி ஏற்பட்டது. இதனால் ஸ்டேடியத்தில் திரண்டிருந்த மக்கள் பதட்டம் அடைந்தனர்.

ஸ்டேடியத்தில் திரண்டிருந்த மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வெளியேற முயன்றனர். இதனால் அங்கு கடுமையான நெரிசல் ஏற்பட்டது. ஒருவர் மீது ஒருவர் விழுந்தார்கள். அதில் பலத்த அடி பட்டும் மூச்சு திணறியும் 66பேர் பயலியா னார்கள். படப்பிடிப்பு நடந்த ஸ்டேடியமே போர்களம் போல் காட்சி அளித்தது. ஆங்காங்கே பிணங்கள் சிதறிக் கிடந்தன.

நூற்றுக்கணக்கானோர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களை அம்புலன்ஸ்களில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். பலியானவர்களில் பெரும் பாலானோர் பெண்களும் குழந்தை களும் ஆவார்கள்.

காயம்அடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண் ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் மணிலா நகரமே சோகத்தில் மூழ்கியது. (து)

# இந்தியாவின் வடக்குப் பகுதியில் தொடர்ச்சியாக நிலநடுக்கம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு துவங்கி குஜராத், நேபாளம், வடக்கு ஜப்பான் என காலை 10 மணிவரை தொடர்ச்சியாக அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் குறைந்த அளவே பதிவான இந்தத் தொடர் நிலநடுக்கத்தில் உயிர் சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில் லை.

இனிவரும் மாதங்களிலும் பாகிஸ்தான் பகுதிகளில் லேசான அளவில் நிலநடுக் கம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் பூகம்ப ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பாக். ஆக்கிர மிப்பு காஷ்மீர் பகுதிகளில் கடந்த ஆண்டு அக்டோபரில் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டதன் பிறகு, 1672 முறை இப் பகுதிகளில் நில அதிர்வுகள் அவ்வப்போது ஏற்பட்டன. இந்நிலையில், நேற்று முன் தினம் அதிகாலை 2.49மணி அளவில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் பூகம்ப ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகை யில், ஹஜாரா மலைப் பகுதியை மைய மாகக் கொண்டு 200கி.மீ.சுற்றளவுக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5, ஆக பதிவான இந்த நில நடுக்கம் இஸ்லாமபாத், வடமேற்கு நக ரான பெஷாவர் மற்றும் முசாபராபாத் ஆகிய நகரங்களில் உணரப்பட்டது. இதில் நிலநடுக்கத்தால் எவ்வித சேதமும் ஏற்பட வில்லை என்றார்.

பாகிஸ்தானில் அதிகாலையில் நில நடுக்கம் ஏற்பட்டு சில மணிநேரங்களில் அடுத்தடுத்ததாக குஜராத் மற்றும் நேபா ளத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குஜராத்தில் கட்ச் பகுதியில் காலை 6.24 மணிக்கு லேசான நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் மிகக் குறைந்த அளவாக 4.4 எனப் பதிவாகியுள்ளது.

இதையடுத்து காலை 7.28மணிய ளவில் நேபாளத்தில் இந்திய எல்லைப் பகுதிகளான பீகார் மாநிலத்தை ஒட்டி யுள்ள இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டுள் ளது. இது ரிக்டர் அளவில் 5.3 எனப் பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்தியாவின் வடக்குப் பகுதியில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து ஜப்பானிலும் பூமி அதிர்வு ஏற்பட்டுள்ளது. (து)

# பிலிப்பைன்ஸில் துப்பாக்கிச் சூடு 8 மாதக் குழந்தை உட்பட 6 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்சில் குடியிருப்புப் பகுதிக் குள் புகுந்து அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சுட்டதில் பொதுமக்கள் 6பேர் கொல்லப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஜோலோ தீவில் முஸ்லிம்கள் அதிகமாக வசித்து வருகின் றனர். அங்கு கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம் களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் பாடிக்குள் என்ற நகரில் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த அடை யாளம் தெரியாத நபர் ஒருவன், துப்பாக் கியால் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரி யாகச் சுட்டார்.

இதில் மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் மற்றும் எட்டுமாதக் குழந்தை உட்பட ஆறு பேர் இறந்தனர். மேலும் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு பேர் பலத்த காயமடைந்தனர். (து)



ஐரோப்பிய பத்திரிகைகளில் நபிகள் நாயகத்தின் படம் வெளியானதற்கு உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ், டென் மார்க், நோர்வே ஆகிய நாடுகள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாலஸ்தீனத்தின் காஸாவில் உள்ள ஐரோப்பிய யூனியன் கமிசன் அலுவலகத்தை தீவிரவாதிகள் முற்றுகையிட்டனர்.

# அணு ஆராய்ச்சி தொடரும்

## ஈரான் அதிபர் அறிவிப்பு

(டெஹரான்)

'எந்த நிபந்தனைக்கும் கட்டுப்பட்டு எங்களின் அணுசக்தி ஆராய்ச்சி நடவடிக் கைகளை கைவிடமாட்டோம்' என ஈரான் அதிபர் அகமதினி ஜாத் கூறினார்.

அணு ஆராய்ச்சி என்ற பெயரில் ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க திட்டமிட் டுள்ளதாக அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகள் கூறி வருகின்றன. இதனால் ஈரானின் அணு சக்தித் திட்டங்களை ஐ.நா, பாதுகாப்பு கவுன்சில் பரிசீலனைக்கு விட வேண்டும் என்று அமெரிக்க ஆதரவு நாடுகள் வற்புறுத்துகின்றன.

மேலும் சர்வதேச அணுசக்தி நிறுவ னத்தை சேர்ந்தவர்களை பார்வைக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரி வரு கின்றன. இதற்கு நடுநிலை நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்தப் பிரச்சினையால் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் நிலவிவருகிறது. இந்த பரபரப்பான சூழ்நிலையில் ஈரான் அதிபர் அகமதினி ஜாத் நேற்று முன்தினம் செய்தி நிருபர்களிடம் பேசியபோது,

எந்த நிபந்தனைக்கும் கட்டுப்பட்டு, எங்களின் அணுசக்தி நடவடிக்கைகளை கைவிடமாட்டோம். செறிவூட்டப்பட்ட யூரே னியம் தயாரிப்புப் பணிகளையும் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காகவே அணுசக்தித் திட்டங்களைப் பயன்படுத்துகின்றோம்.

அணுசக்தித் திட்டங்களை முற்றிலும் கைவிட வேண்டும் என்று சர்வதேச அணு சக்தி ஏஜென்சி கூறுகிறது. எங்களின் அணுசக்தி தொழில்நுட்பங்களை கவர்ந்து, அதிகமான விலைக்கு விற்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இது வெட்கக் கேடான விஷயம்.

சுதந்திரமாக வாழ்கின்ற ஈரான் மக்களை அச்சுறுத்த முடியாது. ஈரான் மக்கள் அவர்கள் வழியல் செல்வர். எந்தக் கட்டுப் பாடுமின்றி சட்டபூர்வமான உரிமை யைப் பெறுவதற்கு ஈரான் மக்களுக்கு உரிமை உள்ளது என்றார். (து)

# அக்னி-3 ஏவுகணை சோதனைக்குத் தயார்

(புதுடெல்லி)

அக்னி-3 ஏவுகணை சோதனைக்குத் தயாராக உள்ளதாக இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கழகம் அறிவித்துள் ளது.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவி ருத்திக் கழகத்தின் செயலாளர் நடராஜன் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டி யளித்தபோது அவர் கூறியதாவது.

அக்னி-3 ஏவுகணை அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிறப் பான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை கண்டம் விட்டுக் கண்டம் தாவக்கூடியது. இந்த ஏவுகணை 3000 கி.மீ.தூரம் பாய்ந்து சென்று தாக்கக் கூடிய வல்லமை கொண்டதாகும். இது 1000கிலோ எடையுள்ள அணு ஆயுதத்தை எடுத்துச் செல்லக் கூடியது.

இந்த ஏவுகணை இப்போது சோத னைக்குத் தயார் நிலையில் உள்ளது. மத்திய அரசு சம்மதம் சொன்னால் எந்தத் திகதியிலும் இந்த ஏவுகணை சோதனை நடத்தப்படும்.

நமது ஏவுகணைகளில் பயன்படுத்தப் படும் ராடார்கள் அமெரிக்க ராடார்களை விடசிறந்ததாகும் என்றார். (து)

ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறிய வேண்டுமானால் அவன் கையில் அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

-இங்கர்சால்

வலம்புரி

# நாட்டின் சுதந்திரதினத்தை தமிழ் மக்கள் புறக்கணித்தது ஏன்?

நாட்டின் 58 ஆவது சுதந்திரதினம் நேற்றாகும். தென்னிலங்கையில் சுதந்திரதினம் வெகு விமரிசையாக இடம் பெற்றுள்ளது.

படையினரின் அணிவகுப்புக்கள், மரியாதைக்கான பீரங்கி வேட்டுக்கள், விமானப் படைகளின் சாகசங்கள் எனப் பலதும் நடந்தன.

நாட்டிற்கு இது 58 ஆவது சுதந்திரதினமாக இருந்தபோதிலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி பதவி கிடைத்த பின்னரான முதலாவது சுதந்திரதின நிகழ்வாகும்.

பதவியேற்று மூன்று மாதங்கள் முழுமையாக முடிவுறுவதற்கு இப்படியொரு சுதந்திர தின நிகழ்வில் மகிந்த கலந்து கொள்வதில் அவருக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாகவிருக்கலாம்.

எனினும் சுதந்திரதின நிகழ்வென்பது இந் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கானதாக இருக்க வேண்டும். அது ஒரு பகுதி மக்களுக்காகவிருக்குமாயின் அதனை நாட்டிற்கான சுதந்திரமெனக் கூறுவது எவ்வகையிலும் பொருத்துடையதாகாது.

நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது 58 ஆவது சுதந்திரதினம் எனக் கூறிக்கொள்ளும் அதேநேரம் 58 வருடங்களாக இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சுதந்திரதின நிகழ்வில் பங்கு பற்றவில்லை என்ற செய்தி உதறித் தள்ளுவதற்குரியதல்ல.

சிங்கள ஆட்சியாளர்கள் , சிங்கள மக்கள், பௌத்த மதம் என்ற குறுகிய உணர்வுகளால் தாம் நசுக்கப்பட்டு 58 வருடங்கள் கடந்து விட்டதென்ற நினைப்பே தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

இந்த நினைப்பு 58 வருடங்கள் நீடிக்கும் வகையில் அதனைத் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களையும் சுதந்திரதின நிகழ்வில் பங்கு பற்ற வைக்கும் பக்குவம் சிங்களத் தலைவர்கள் எவருக்கும் இல்லை என்பதே உண்மை.


ஆக, இலங்கை என்ற நாட்டில் வெள்ளையர்களிடமிருந்து சிங்கள மக்களே சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.

தமக்கும் இந்த சுதந்திரம் கிடைக்க வேண்டும். தமது மண்ணிலும் தமிழர் படை அணிவகுக்க, மரியாதைக்கான பீரங்கி ஒலிக்க சுதந்திரதினம் கொண்டாட வேண்டும் என்ற பெருவிருப்பம் தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

எனவே, தமிழ் மக்கள் ஒரு இனத்துக்குரிய சுதந்திரதினத்தில் பங்கு பற்ற வில்லை. இதுவே உண்மை.


தரையில்...


கடலில்...


வானில்...

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற இலங்கையின் 58 ஆவது சுதந்திரதின நிகழ்வில் இருந்து....

# இலங்கை அரசாங்கத்தின் மீது ஐ.நா.தடை; கனேடிய அமைதிக்கான அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தல் போன்ற சம்பவங்கள் தொடருமேயானால் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நிதி உதவி வழங்கும் சர்வதேச அமைப்புக்களின் பொருளாதாரத் தடையை இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்று இலங்கையின் அமைதி மற்றும் சமத்துவத்துக்கான கனேடிய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஏ.யேசுதான் விடுத்துள்ள அறிக்கையில்,

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெலிக்கந்தை பகுதியில் கடந்த ஜனவரி 29மற்றும் 30 ஆகிய நாட்களில் இரு கடத்தல் சம்பவங்களை இராணுவப் புலனாய்வுத்துறையின் வழிகாட்டுதலில் துணை இராணுவக் குழுவினர் மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

போரினாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்டோருக்கான பணிகளை மேற்கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை இக்குழுவினர் அடுத்தடுத்து ஒரே இடத்தில் கடத்திச் சென்றுள்ளனர்.

இதையடுத்து மனிதாபிமானப்பணிகளை மேற்கொண்டு வருவோர் அப்பகுதிகளில் தங்களது பணிகளைச் செய்ய மறுத்து வருகின்றனர். ஏற்கனவே போரினாலும் ஆழிப்பேரரை யாலும் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களின் நிலைமையை தற்போதைய சம்பவம் மேலும் மோசமடையச் செய்துள்ளது.

வடக்கு-கிழக்கில் அரச படைகளாலும் இராணுவக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற கடத்தல்கள், பிடியாணை இல்லாத கைதுகள் , தடுத்து வைப்புகள், மக்கள் மீதான தாக்குதல்கள் , சித்திரவதைகள் ஆகியவை யுத்த நிறுத்த மீறல் களே .இவற்றைத்தடுத்து யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுகள் நடத்துவதற்கான ஏதுவான நிலையை அரசாங் கம் உருவாக்க வேண்டும்.

இலங்கை நிலைமைகள் தொடர்பில் கடந்த ஜனவரி 18ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கையில் சட்டத்தின் செயற்பாடுகள் இல்லாத நிலையில் மனித உரிமை மீறல்கள் நடந்தேறுகின்றன. நீதித்துறை மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் செயலற்று இருப்பதே இந்த நிலைமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடருமானால் பல்வேறு நாடுகள் மீது ஐக்கிய நாடுகள் சபையும் இதர நிதி உதவி வழங்கும் சர்வதேச அமைப்புக்களும் பொருளாதரத் தடை விதிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

ஆகையால் கடத்தப்பட்டோரை பாதுகாப்பாக விடுதலை செய்ய இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் , ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அரசுக்கு உரிய அழுத்தத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (து)

# முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் இளைஞர்கள் தீவுச் சேனையில் ஆயுதப் பயிற்சி பெற்று வருவதாக நேற்று முன்தினம் சோலையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த சிறுவன் செந்தில்நாதன் அருள்ராஜ் தெரிவித்தான்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து 15 முஸ்லிம் இளைஞர்கள் தீவுச்சேனைக்கு வந்ததாகவும் அவர்களுக்கு கைத்துப்பாக்கி சூட்டுப் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் அம்பாறை மாவட்டத்திற்குச் திரும்பிச் சென்றதாகவும் தெரிவித்தான். இந்த முஸ்லிம் இளைஞர்களில் தாடி வளர்த்த வாவா என்பவரே பொறுப்பாக இருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# மதுவரிப்பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

மது வரித்திணைக்களத்தில் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் ஆண்களாகவும், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவராகவும், ஆகக் குறைந்தது 5அடி 6அங்குல உயரமுடையவராகவும் 30 அங்குல மார்புச் சுற்றளவு உடையவராகவும், சிறந்த கண்பார்வையுடையவராகவும் இருக்க வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் மதுவரி ஆணையாளர் மா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (து)

# துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் காயம்!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி அப்ரா நகரில் முஸ் லிம் ஆயுதக் குழுவொன்றினால் மேற்கொள்ளப் பட்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் 14வயது சிறுவனொருவர் காயங் களுக்கு இலக்காகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கடையொன்றிற்கு முன்பாக இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக அப் பிரதேசவாசிகளின் தகவல்களின் படி இக் கடையில் போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும்,

இஸ்லாமிய சமூக சீர்திருந்தவாதிகளினால் இந்த துப் பாக்கிப் பிரயோகம் கடை உரிமையாளரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பப்படிருக்கலாம் என்று தெரிவிக் கப்படுகின்றது. முன்னரும் ஒரு தடவை இவ்வியாபார நிலையம் மீது கைக் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எப்போதும் நான் பிரம்மம் என்றே தியானியுங்கள். காது வழியாக இந்த உண்மையைக் கேட்டுக் கேட்டு நெஞ்சுநிரம்ப வேண்டும். ஒவ்வொரு நரம்பும், தசையும் இரத்தத்துளியும நானே அவன் 'நானே அவன' என்ற நாதத்தை எழுப்ப வேண்டும். மரணத்தின் வாயில்இருக்கும் போது கூட நானே அவன்என்றே நெஞ்சும் வாயும் உட லின் ஒவ்வொரு மயிர்க் காலும் ஒலிக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்







காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற இலங்கையின் 58 ஆவது சுதந்திரதின நிகழ்வில்...

# புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தல் அமைதி முயற்சிக்கு அச்சுறுத்தல்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கருத்து

இலங்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் கடத்தப்பட்ட சம்பவத்தின் மூலம் அமைதி முயற்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் செரட் ப்றவுண் மற்றும் பற்றிக் திபேரி ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அரசாங்கத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச்செயலாளர் கிஸ்டினா றொக்காவுக்கு அவர்கள் அனுப்பிய கடிதத்தில்,

தெற்காசியாவின் அமைதி முயற்சிகள் தொடர்பான முக்கியமான ஒரு விடயத்தை உங்கள் பார்வைக்கு நாங்கள் கொண்டு வருகிறோம். இலங்கையில் ஆழிப்பேரலை மீளமைப்புப்பணியில் ஈடுபட்ட 10 தொண்டர்கள் அண்மையில் கடத்தப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களில் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய கடத்தல் செயற்பாடுகளானது அமைதி முயற்சிக்கு பாரிய அச்சுறுத்தலாக இருக்குமென்று நாம் கருதுவதால் இந்தப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணவேண்டும்.

இது விடயத்தில் தாங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என்று நாம் நம்பிக்கை கொள்கின்றோம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# மங்களவின் கருத்துக்கு ரி.ஆர்.ஓ. எதிர்ப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் கடத்தப்பட்டமை தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்ததை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாகி அர்ஜுனன் எதிர்வீரசிங்கம் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக தகவல் கிடைத்தவுடன் மட்டக்களப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதேநேரத்தில் கொழும்பில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றியிருந்த பொலிஸ்மா அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# என்னைக் கடத்தவில்லை

### வாழைச்சேனை அதிபர்

தம்மைக் கடத்தியதாக வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லையென வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபர் மு.தவராசா(வயது-53) தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் அதிபர் கடத்தப்பட்டதாக வெளிவந்த செய்திகள் தவறானவையெனக் குறிப்பிட்ட பிரஸ்தாப அதிபர், பாடசால்ல நிர்வாகத்திற்கும் பெற்றோருக்கும் இடையே ஏற்பட்டிருந்த குழப்பநிலை தொடர்பாக கல்விப் பொறுப்பாளருக்கு விளக்கமளிக்கச் சென்ற செய்தியேதான் கடத்தப்பட்டதாக வெளிவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (ந)

### யாழ்.குடாநாட்டு வன்முறைகள்

# மக்களிடமிருந்து தகவல்களைப் பெற ஜனாதிபதி விசாரணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதென, வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் தொடராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் முதலாவது கட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள இணக்க சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்படி குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் ஜய விக்கிரம, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜாவிட் யூசுப், சட்டவரைவுத் திணைக்கள பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக சட்டத்தரணி ஜாவிட் யூசுப் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்களையும் முறைப்பாடுகளையும் பொதுமக்களிடமிருந்து பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தேசிய ஊடகங்கள் மூலமும் யாழ்.குடாநாட்டிலுள்ள பிராந்திய ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரங்கள் வெளியிடப்படும். அதற்கமைய பொதுமக்கள் இது தொடர்பான தகவல்களை எமது குழுவிற்கு தெரிவிக்க முடியும்.

மக்களால் எமக்கு வழங்கப்படும் தகவல்களை வைத்து எமது குழு மேற்படி சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் என்றார். (து)

# யாழ்.சிறையிலிருந்து 10கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 58 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்.சிறைச்சாலையிலிருந்த பத்து கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக சிறைத் தண்டனை பெற்ற கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-132)

# வவுனியாவில் ஆணின் சடலம்

(வவுனியா)

வவுனியா கோமன்குளம் பகுதியிலிருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அப்பகுதி மக்கள் தெரிவித்த தகவலையடுத்தே இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின்னரே சடலம் இப் பகுதியில் கொண்டு வந்து போடப்பட்டுள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-39)

## புலிகள்-தமிழ்...

துரையாடினோம்.

அத்துடன் உள்ளூராட்சி தேர்தல் நடந்தால் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் வெற்றிபெறுவதைத் தடுப்பதற்காக எமது தேசத்தின் விடுதலையின் மீது பற்றுக் கொண்டவர்களை அந்தத் தேர்தலில் பங்குபற்ற செய்வதற்கான சாத்தியங்கள் பற்றியும் நேற்றைய சந்திப்பில் ஆராய்ந்தோம்.

அதேவேளை படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்திற்குப் பதிலாக யாரை தெரிவு செய்வது என்பதுபற்றிய இரண்டு, மூன்று நாட்களில் அறிவிக்கப்படும் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ந)

## நீதிச் சேவை...

வடைந்ததால் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து கவுன்சில் செயற்படவில்லை.

இப்போது நீதிச்சேவை ஆணைக்குழுவும் செயற்படமுடியாத நிலைதோன்றியுள்ளது. இதனால் இவ்வுயர் பதவியில் உள்ள இருவரின் இராஜினாமாவுக்கான காரணங்களை அறிவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது. இவர்களின் மனச்சான்றுகளை பாதித்த விடயங்கள் என்ன என்பது பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கேட்டுள்ளது.

மூன்று நீதியரசர்களைக்கொண்ட நீதிச் சேவை ஆணைக்குழுவின் மூன்றாவது உறுப்பினர் பிரதமநீதியரசர் சரத்சில்வா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-6)

## என்னுடைய ஆட்சியில்...

அரசியல் கட்சிகளுடன் வெவ்வேறாகவும் சர்வகட்சி மாநாட்டின் மூலமாகவும் நாம் அண்மையில் பேச்சுவார்த்தையினை ஆரம்பித்தோம். அவை மிகவும் வெற்றியளித்தன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் உட்பட தவறான வழிகாட்டலில் இருந்து படிக்க வேண்டிய பாடங்களை சரியாகப் புரிந்து கொள்ள இந்நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

யுத்தநிறுத்தத்தின் போது கூடுதலாகப் பெருக்கெடுத்து ஓடுகின்ற இரத்த ஆறு என் ஆட்சியில் ஓடாது. அது மீண்டும் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டுமானால் சமாதானத்திற்காக நாம் கூடுதலான வியர்வை சிந்த வேண்டும் என்பதை அனைவரும் தத்தமது உள்ளங்களில் ஆழமாகப் பதிக்க வேண்டும்.

இப்பாரிய சவாலை வெற்றி கொள்ள ஒற்றுமையுடனும் ஒரு மனதுடனும் ஒன்றுபடுமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுகின்றேன். புதிய சமாதானத்திற்காக செயற்படும் போது ஒளிவு மறைவில்லாத செயற்பாடு அவசியம். தீர்வொன்றினை பலவந்தமாகத் திணிப்பதாலோ அல்லது மிரட்டலுக்கு அடிபணிந்தோ எந்தவிதத் தீர்வையும் எட்டமுடியாது.

ஆழமாகவும் விரிவாகவும் நடத்தப்படும் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமே அரசியலில் ஒருமித்த கருத்தை அடைய முடியும். எதிர்க்கட்சி உட்பட அரசியல் கட்சிகள் அனைத்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இணக்கப்பாட்டுடன் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை இராணுவ அணிவகுப்பு மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய இலங்கையின் 58 ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றன.

நாட்டின் கடந்த கால நிலைமைகள் காரணமாக சுமார் 28 வருடங்களின் பின்னர் கொழும்பு காலிமுகத்திடலில் இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற நேற்றைய நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு அங்கு முப்படைகளின் மரியாதை வழங்கப்பட்டது.

தேசியக் கொடியேற்றப்பட்டு நாட்டின் சுதந்திரத்திற்காகவும் நாட்டிற்காகவும் உயிர் நீத்த தியாகிகளுக்காகவும் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அரசாங்க அமைச்சர்கள், படை அதிகாரிகள், வெளியுறவு இராஜதந்திரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (4)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 05.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.